பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 புரட்டாதி 27 செவ்வாய்க்கிழமை (13.11.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 347

## 'யுனிசெவ்' ஆறு ஆண்டுகளில்

## புலிகளுக்கு ரூ.10 கோடி உதவி

### விமல் வீரவன்ச நாடாளுமன்றில் விசேட



கொழும்பு, நவம்பர் 13

ஐ.நாவின் சிறுவர்களுக்கான நிதியம் (யுனிசெவ்) கடந்த ஆறு ஆண்டு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குப் பல சந்தர்ப்பங்களில் மொத்தமாக பத்துக்கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை வழங்கியிருக் கின்றது.

- இவ்வாறு நாடாளுமன்றில் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து குற்றம் சுமத்தியிருக்கிறார் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் அக்கட்சியின் பிரசாரச் செயலாளருமான விமல் வீரவன்ஸ.

நேற்று நாடாளுமன்றம் கூடியபோது விமல் வீரவன்ஸ எம்.பி. இவ்விவகாரம் தொடர்பாக சபாநாயகரின் அனுமதியுடன் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அப்போது அவர் கூறியிருப்பவை வருமாறு:-

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இந்த அறிக்கையை வாசிப்பதற்கு அனுமதியளித்ததையிட்டு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடந்த வார இறுதியில் வெளிவந்த சிங்களப் பத்திரிகையொன்றில் பிரசுரமான 'யுனிசெவ்' அமைப்பு தொடர்பான விடயங்களில் இந்த அதியுயர் சபை கவனம் செலுத்த வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான நிதியம் அல்லது 'யுனிசெவ்' நிறுவனம். ஏனைய உறுப்பினர் நாடுகளில் போன்றே இலங்கையிலும் சிறுவர்களுக்காகவே செயல்படுவதாகக் கூறிக் கொள்கிறது. என்றாலும், இந்த அமைப்பு 2000 ஆம் ஆண்டு ஜூலை 19 ஆம் திகதியிலிருந்து 2006 ஜூலை 22 ஆம் திகதி வரையிலான காலத்தில் புலிகள் இயக்கத்துக்கு பத்துக்கோடி மூன்று லட்சத்து 27 ஆயிரத்து 784 ரூபாவை பல சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுத்துள்ளது. 'ரி.ஆர்.ஓ' என்ற புலிகளின் இயக்கத்தின் கூலிக்காக சேவையாற்றும் அரச சார்பற்ற தன்னார்வ அமைப்பின் ஊடாகவே இவ்வளவு பெரிய தொகையைப் பெற்றுக் கொடுத்துள்ளது. ஆழிப்பேரலை ஏற்பட்ட சமயத்தில் ஆழிப்பேரலை உதவிகளைக் கொண்டு வந்து பிடிபட்டதும் இந்த ரி.ஆர்.ஓ. அமைப்புதான். அது புலிப் பயரங்கவாதிகளின் 'கைக் கூலியே' என்பது எல்லோருக்கும் தெரியும். எனவே, ரி.ஆர்.ஓ. ஊடாக புலி பயங்கரவாதத்துக்கு பணம் பெற்றுக்கொடுத்திருப்பதை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

(7ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா, மன்னாரில் வெவ்வேறு மோதல்கள்

கொழும்பு, நவ.13

வவுனியா, மன்னார் போன்ற பிரதேசங்களில் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றன என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்திருக்கின்றது.

வவுனியா, நரிக்குளப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.45 மணியளவில் இடம் பெற்ற மோதலில் 3 விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர் என்று படைத்தரப்பில்

(8ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இளைஞன் மீஞ்சூரில் கைது

மீஞ்சூர்.நவ.13

தமிழக மீஞ்சூர் ரயில் நிலையம் அருகே சந்தேகத்திற்கு இடமாக நடமாடித்திரிந்தார் என யாழ்.இளைஞர் ஒருவர் கைதாகி விசாரணைகளை எதிர்கொண்டு வருகின்றார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ராஜீ நிசாந்த் (வயது - 18) என்பவரே இவ்வாறு நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

இலங்கையில் தொடரும் பதற்றத்தைத் தொடர்ந்து கடல்வழியாக தானும் மேலும் ஐவர் என அறுவர் தமிழகம் வந்தனர் என்றும், நடு வழியில் திசைக்கொருவர்பிரிந்து விட்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு உயர் வலயத்தினுள் மீளக்குடியேற அனுமதிக்கலாமா?

### பாதுகாப்புச் செயலரின் கருத்தைக் கோருகிறது உயர் நீதிமன்றம்

கொழும்பு, நவ. 13

யாழ். குடாநாட்டின் வலிகாமம் பிரதேசத்தில் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் தமது காணிகளில் விவசாயம் செய்யவும் மீளச்சென்று குடியேறவும் விருப்பம் தெரிவித்துள்ள 927 பேரை அதற்கு அனுமதிக்க முடியுமா என்பது குறித்து ஆராய்ந்து முடிவை அறிவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு உயர்நீதிமன்றம்நேற்று உத்தரவிட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உட்பட சிலர், தாங்கள் மேற்படி பிரதேசத்தில் மீளச் சென்று குடியமர அனுமதிக்கப்படாதமையை ஆட்சேபித்து உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள், நேற்று பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தன, ஜகத் பாலபட்டபெண்டி ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இவ்வாறு உத்தரவிட்டது.

மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி அ.விநாயகமூர்த்தி, மேற்படி உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குத் திரும்பிச் செல்ல விரும்பியுள்ள 927 பேரையும் அழைத்து யாழ். அரச அதிபர் விசாரித்துள்ளார். அவர்களின் காணி உறுதிகளும் பரிசீலிக்கப்பட்டுள்ளன. எனவே, அவர்கள் தத்தமது நிலங்களுக்குத் திரும்புவதற்கு அனுமதிக்கு

(8ஆம் பக்கம் பார்க்க)


## இலங்கை விவகாரம் இன்று பிரிட்டிஷ் நாடாளுமன்றில்!

கொழும்பு, நவ.13

பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்கக்கோரும் ஒத்திவைப்பு வேளை விவாதம் பிரித்தானிய நாடாளுமன்றில் இன்று எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் குக்கீஸ் என்பவரினால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த ஒத்திவைப்பு வேளை விவாதம் பெரும் எதிர்பார்ப்பை இன்று சர்வதேச சமூகத்தின் மத்தியில் ஏற்படுத்தும் எனக் கூறப்படுகின்றது.

கடந்த மே மாதம் குறித்த எம்.பியினால் கொண்டுவரப்பட்ட விவாதத்தின் தொடர்ச்சியாகவே இன்றைய தினமும் இவ்விவாதம் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)



அரச தடையையும் மீறி பேரணியில் கலந்து கொள்ளத் திரண்டவர்களில் ஒரு பகுதியினர்

### தடையை மீறி பேரணி செல்ல முயன்ற

## வைகோ, நெடுமாறன் உட்பட 316 பேர் கைது!

## 15 நாள் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவு!!

சென்னை, நவ. 13

புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குண்டு வீச்சில் கொல்லப்பட்டமையைக் கண்டித்தும் அவருக்கு இரங்கல் தெரிவிக்கும் விதத்திலும் - சென்னை மாநகர பொலிஸ் ஆணையாளரின் தடை உத்தரவை மீறி - வீரவணக்கப் பேரணி நடதத முற்பட்ட ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ மற்றும் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறன் உட்பட 316 பேர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் 14 பேர் பெண்கள்.

இவர்கள் அனைவரும் பின்னர் 15 நாள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட் டுள்ளனர். தடையைமீறி பேரணி நடத்தியதாக இவர்கள் மீது குற்றம் சாட்டப் பட்டிருக் கிறது.

சென்னை மன்றோ சிலை அருகில் இருந்து நேற்று மாலை 4.30 மணிக்கு இவர்கள் தங்களது கட்சி மற்றும் அமைப்புகளின் தொண்டர்களோடு பேரணியாகச் செல்ல முற்பட்டபோதே கைது செய்யப்பட்டனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு உயிராபத்து ஏற்பட்டால் அதற்கு அரசே பொறுப்பு

### பஸிலின் உரையை சுட்டிக்காட்டி அரியநேத்திரன் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 13

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய 22 நாடாளுமன்ற உறுப்பினர்களின் உயிர்களுக்கு ஏதும் ஆபத்து ஏற்பட்டால் அதற்கும் அரசே பொறுப்பேற்க வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசுடன் சேராவிட்டால் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என்று பஸில் ராஜபக்ஷ கூறியிருப்பதன் மூலம் கூட்டமைப்பின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் கொலைகளுக்கு அரசுதான் காரணம் என்பது புலனாகியிருக்கின்றது.

- இப்படித் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் கூறினார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற - வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான - விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் கூறியவை வருமாறு:-

வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றில்

(8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பிறந்தநாள் வாழ்த்து



HAPPY BIRTHDAY



13 . 11 . 2007

மகிழினியன்

இணுவில் கிழக்கு, தியேட்டர் வீதியைச் சேர்ந்த திரு.திருமதி நக்கீரன் - சந்திரா தம்பதியினர் செல்வப்புதல்வன்

**நக்கீரன் மகிழினியன்**

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரைப் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் ஞானவைரவர் ஆசியுடன் வாழ வேண்டுமென வாழ்த்துவோர்:

அப்பா - அம்மா, பப்பா - அப்பப்பா,
தாத்தா - அம்மம்மா, மாமன்மார் - அத்தைமார்,
கண்டி நண்பர்கள், உறவினர்கள், அயலவர்கள்.
தியேட்டர் வீதி, இணுவில் கிழக்கு, இணுவில்.

## பாசியில் சறுக்கிவீழ்ந்து வயோதிபபெண் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 13

கிணற்று முற்றத்தில் இருந்த பாசியில் வழுக்கி வீழ்ந்து வயோதிபப் பெண் ஒருவர் மரணமானார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம் பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த நட ராசா கனகம்மா (வயது-75) என்பவரே மரணமானவராவார்.

இவரது மரணம் தொடர்பாக சாவகச்சேரி பதில் நீதி வான் செ.கணபதிப்பிள்ளை விசாரணை நடத்தினார்.

(அ-207)

## ஊர்காவற்றுறையில் சுற்றிவளைப்புத் தேடுதல்

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைப் பகுதி நேற்றுக் காலை முதல் படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது அனலைதீவு, எழுவைதீவு பகுதிகளில் இருந்து யாழ் நகர வந்தமக்கள் படையினரின் பாதுகாப்புடன் ஊர்காவற்றுறைக்கு கொண்டு வந்து விடப்பட்டனர். இதனால் அனலை தீவு, எழுவைதீவுப் பயணி கள் எவ்வித இடையூறுமின்றி யாழ் நகருக்கு வரக்கூடியதாக இருந்தது.படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது சந்தேகத்தின் பேரில் எவரும் கைது செய்யப் பட்டதாகத் தெரியவர வில்லை.(203-111)

## அறிவித்தல்


சிரேஷ்ட விரிவுரையாளர்
**அமரர் சிவகுரு உமாகாந்தன்**
அவர்களின்.இறுதி அஞ்சலியும் இரங்கலுரையும்

இடம்:- உயர் தொழில்நுட்பவியல் நிறுவன மண்டபம்
காலம்:- இன்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை
நேரம்:- மு.ப.9 மணி

அன்னாரின் புகழுடல் இறுதி அஞ்சலிக்காக நிறுவனமண்டபத்தில் வைக்கப்பட்டு இரங்கலுரை நிகழ்வுகள் நடைபெறும்.

உயர்தொழில்நுட்பவியல் நிறுவகம்,
78, பலாலி வீதி, திருநெல்வேலி. (67890) பணிப்பாளர்.

## சுடராக அணையவில்லை என்றும் எம் இதயத்தில் தீபமாக



பேராசான்
**சிவகுரு உமாகாந்தன்**

வரலாற்றில் பெருமைமிக்க யாழ்ப்பாணத் தொழில்நுட்பக் கல்லூரியின் ஓர் எழுச்சி மிக்க வரலாற்றுப் பாதையில் தன்னை அர்ப்பணித்து சேவையாற்றியதன் மூலம் தன் பெயரைப் பொன் எழுத்துக்களால் பொறித்துக் கொண்ட வரும் உதயமான உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவராகவும் திகழ்ந்த எம் அன்புத்தெய்வம் உமகாந்தன் அவர்களுக்கு இதயத்தில் இருந்து வழியும் இரத்தக் கண்ணீருடன் எமது அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

அதிபர், பகுதித்தலைவர்கள், விரிவுரையாளர்கள்,
உத்தியோகத்தர்கள், சி.க.கூட்டுறவுச் சங்கம், ஊழியர் சங்கம்,
தலைவர், செயலாளர், (சி-54337)
**தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்.**


## MICRO COMPUTER ACADEMY

INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
No:328,365 Ariyakulam Junction
Stanley Road, Jaffna, Srilanka.

நீண்டகால அனுபவமிக்க விரிவுரையாளர்களின் சேவையின் கீழ் மிகக் குறைந்த கட்டணத்தில்

**Diploma Courses**

| Course | Duration | Fee |
| --- | --- | --- |
| Diploma in Microsoft Office | 3Months | 1000/= |
| Diploma in Desktop Publishing | 3Months | 1000/= |
| Diploma in Graphics Designing | 4Months | 1800/= |
| Diploma in Computerized Accounting | 4Months | 2500/= |
| Diploma in Computer Hardware | 3Months | 1800/= |
| Diploma in Web Designing | 3Months | 1500/= |
| Diploma in Internet Technology | 3Months | 1500/= |

**Certificate Courses**

| | | | |
| --- | --- | --- | --- |
| Ms Word | 500/= | PageMaker | 700/= |
| Ms Excel | 500/= | CorelDRAW | 700/= |
| Ms Access | 500/= | Photoshop | 700/= |
| Ms PowerPoint | 500/= | Internet & E-Mail | 700/= |

☎-021 222 7866

Batch I :15.11.07 அனுமதிகளை முன்கூட்டியே Batch III -17.11.07
Batch II :16.11.07 பதிவு செய்யுங்கள்! Batch IV -18.11.07


## கண்ணீர் அஞ்சலி

**ஏகாம்பரம் சிவபாக்கியம்**

எமது ஸ்ரீ சுந்தர ஐயப்ப ஆஞ்சிநேயர் கோவிலில் தொண்டு செய்த ஏகாம்பரம் சிவபாக்கியம் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மசாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்
சோதி வீதி,நவிண்டில்வடமராட்சி. (67581)

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை தங்கம்மா

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கம்மா 12.11.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற குணசேகரம் மற்றும் புஸ்பரத்தினம், செல்வராணி, நவரட்ணராஜா, அன்னலெட்சுமி, பவானி, விமலாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் இராசரட்டினம், ஜெயச்சந்திரன், லீலாவதி ஆகியோரின் பாசமிகு மாமியும் சபாநாயகம், சிலோ, மதிவதனன், கலைவாணி, தனலோஜன், மயூரன், திவ்வாதரன், வாகீசன், இந்திரகாசன், சிற்றிகா, சிந்துவா, ரதீபன், சங்கீதா ஆகியோரின் பேர்த்தியும் மகிந்தன், மிதுனன், லிண்டா,டியானா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2007) செவ்வாய்க் கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வண். வடமேற்கு, (67897) தகவல்:
ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.



## விற்பனைக்கு

யமகா லிபரோ WP - HT இலக்கமுடைய வைத்தியர் ஒருவரின் தனிப்பட்ட பாவனையில் உள்ள மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு.

55/23, சபாபதி வீதி,
கொக்குவில்.

தொடர்பு:-222 5179, 0777 225320 (67899)


## கண்ணீர் அஞ்சலி



சிரேஷ்ட விரிவுரையாளர்
**சிவகுரு உமாகாந்தன்**
B.Com. Hon (Vid), M.A. (Jaffna)
Dip. in Pub.Ad (Jaffna) SLTES - I

கல்விப் புலமதனில்
கற்றுணர்ந்த வித்தகரே
அறிவுப் பசி தேடி வந்தோர்க்கெல்லாம்
அறிவுக் கண் திறக்கும் ஆசானாக
ஆக்கவழி காட்டி நின்றவரே
எண்ணிய கருமமெல்லாம் எளிதில் முடிப்பவரே
வண்ணச் சிரிப்போடு வலம் வந்த உத்தமரே
நிகரில்லாத் திறமையுடன் நீதிவழி நிற்பவரே
கொண்ட கொள்கையில் கபடில்லாத
பற்றுறுதி கொண்டவரே
நேர்மையில் சிறந்தவரே நெஞ்சுறுதி மிக்கவரே
காலத்தின் கோலத்தால் காணாது போய்விட்டீர்
எண்ணும் போதெல்லாம் எம் மனது துடிக்கிறதே
திடம் படைத்த நெஞ்சும்
திடுக்கிட்டே நடுநடுங்கி கலங்கிப் போக
இவ்வுலகில் வாழ்ந்தது போதும் என்றா...?
இறைவன் தாழடியை எய்துவிட்டீர்
ஐயா நீர்!
ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பணிப்பாளர், விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள்
(67889) உயர்தொழில்நுட்பவியல் நிறுவகம்,
78, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

### கேள்வி அறிவித்தல்

கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் : 22.11.2007 பி.ப 2மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி : 30.11.2007 பி.ப 2 மணி வரை
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 30.11.2007 பி.ப 2.30 மணி.

| வேலையின் விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணம் (ரூபா) | ஆகக்குறைந்த இக்ராட் பதிவுத் தரம் |
| --- | --- | --- | --- |
| 1. கைதடியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர் விடுதியில் வீதியின் இருமருங்கும் குறுஞ்சுவர் அமைத்தல். | 9,000.00 | 500.00 | M 8 |
| 2. கைதடியில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் விடுதிக் காணியில் மூலிகைத் தடாகம் அமைத்தல். | 40,000.00 | 500.00 | M 7 |
| 3. கைதடியில் அமைந்துள்ள யாழப்பாண பல்கலைக்கழக சித்தமருத்துவத்துறை கட்டடங்களில் மரவேலை/ உலோக வேலைகள்/ பொருத்து வேலைகள் | 60,000.00 | 500.00 | M 6 |
| 04. யாழ்ப்பாண பல்கலைக் கழக விளையாட்டரங்கில் மட்டப்படுத்தல் மண் நிரப்புதல் வேலைகள். | 40,000.00 | 500.00 | M 7 |
| 05. யாழ்ப்பாண பல்கலைக் கழக பாலசிங்கம் மாணவியர் விடுதியின் சுற்று மதிலை உயர்த்தி அமைத்தல். | 40,000.00 | 500.00 | M 7 |
| 06. யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆனந்த குமாரசாமி மாணவர் விடுதியின் சுற்று மதிலை உயர்த்தி அமைத்தல். | 40,000.00 | 500.00 | M 7 |
| 07. யாழ்ப்பாண பல்கலைக் கழக ஆனந்த குமாரசாமி விடுதியில் கிறவல் பாதையின் இருமருங்கும் தடுப்புச்சுவர் அமைத்தல். | 10,000.00 | 500.00 | M 8 |

கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப்பதிவாளர்/ மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் அவர்களிடமிருந்து இக்ராட் பதிவுப் புத்தகத்தையும் பல்கலைக்கழகக் காசாளர் கரும பீடத்தில் மேற்குறிப்பிட்ட தொகையைச் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டையும் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்களை பதிவாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், த.பெ.இல 57, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு உரிய காலத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடப்பட வேண்டும். கடித உறையின் இடது மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

தேவைப்படின் கேள்விப்பத்திரங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூலதன வேலைகள் மற்றும் திட்டமிடல் பிரிவில் வழமையான அலுவலக நேரங்களில் கட்டணம் ஏதுமின்றிக் கேள்விதாரர்கள் பரிசீலிக்க முடியும்.

12.11.2007. பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவையில் உள்ள சகலருக்கும் 2 ஆம் அரச கருமமொழித் தேர்ச்சி அவசியம்

## உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், நவ.13

அரச சேவையில் உள்ள அனைத்து ஊழியர்களும் தாம் சேவையில் நியமிக்கப்பட்டு 5 வருடங்களுக்குள் இரண்டாம் அரச கரும மொழியில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என அரச நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

குறித்த காலப் பகுதிக்குள் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளாத அலுவலர்களின் சம்பள ஏற்றம் பிற்போடப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திசாநாயக்க சகல அமைச்சின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் 07/2007 (1) இலக்க சுற்றிக்கை ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதன் பிரகாரம் அரச அலுவலர்கள் பெற்றுக் கொள்ளவேண்டிய மொழித் தேர்ச்சிமட்டம் கணிப்பிடப்படவுள்ளது.

மேலும் 2007.07.01 ஆம் திகதி தொடக்கம் வழங்கப்படவுள்ள சகல நியமனக் கடிதங்களிலும் இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சி அவசியம் எனக் குறிப்பிடப்படவுள்ளது. (202-207)

# அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பயன்படுத்தாத விடுமுறைக்குச் சம்பளம் இல்லை

அச்சுவேலி,நவ.13

அரச ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு பயன்படுத்தாத விடுமுறைக்கு இந்த வருடம் தொடக்கம் சம்பளம் வழங்கப்படமாட்டாது என உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

2006 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட பிரேரணையில் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் அரச ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு 2006 ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளாத லீவு தினங்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டது. அந்த வகையில் ஆகக்கூடியது 30 தினங்களுக்கான சம்பளக் கொடுப்பனவு ஊக்குவிப்பாக வழங்கப்பட்டது.

2007 ஆம் ஆண்டுக்கு அத்தகைய ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என 'பயன்படுத்தாத விடுமுறைகளைக் கணிப்பிடுவதன் மூலம் அரச அலுவலர்களின் வினைத் திறமையை அதிகரித்தல்' என்ற தலைப்பின் கீழ் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு கடந்த முதலாம் திகதி வெளியிட்டுள்ள 24/2007 ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (202-11)

# புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் விவரம்

கடந்த ஓகஸ்ட் மாதம் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

சில பாடசாலைகளின் பெறுபேறுகள் வருமாறு -

**வல்வை மகளிர் ம.வி**

மு.புவித்திரா (156), செ.ரஜிந்தன் (152), ச.சிறிரதன் (149), ஞா.நிர்மலா (148), ச.வேணுநாதன் (143),

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

பா.பாரதி(176), ம.மாதுளா (157), யோ.கிருஷ்திகா (152), ந.நவஜோதி (152), க.சுபாகினி (148), ப.லோசிகா (144),

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி**

ச.காகித்தியன் (171), சி.சதீஸ் (161), ர.ரதீபன் (141). (202-155)

# 1980 ஜூலை வேலைநிறுத்தத்தில் வேலை இழந்த ஊழியர்களின் விவரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம்,நவ.13

கட்டடத் திணைக்களத்தில் தற்காலிக மற்றும் சமயா சமய ஊழியர்களாகப் பணிபுரிந்து 1980 ஜூலை வேலை நிறுத்தத்தால் வேலை இழந்தவர்களின் தகவல்களைத் திணைக்களம் திரட்டி வருகின்றது.

சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தமது விவரங்களை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் 'கட்டடப் பணிப்பாளர் அதிபதி, கட்டடத் திணைக்களம், செத்ரிபாய, பத்திரமுல்ல' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (222)

# குருநகரில் பால் உணவுகள் விற்பனை நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம்,நவ.13

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தால் பால் உணவுகள் விற்பனை நிலையம் ஒன்று குருநகர் நவீன சந்தை கட்டட வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் இந்த நிலையத்தைச் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். இச் சங்கத்தின் 24 ஆவது கிளை நிலை யம் இதுவாகும். (202-224)

# வேலணை பிரதேச செயலகத்தால் அபிவிருத்திப் பணிகள் பல முன்னெடுப்பு

நல்லூர்,நவ.13

வேலணைப் பிரதேச செயலகத்தால் 'கமநெகும' திட்டத்தின் கீழ் பிரதேசத்தில் பல அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வேலணை மேற்கு, கண்ணபுரம் பகுதியில் நீர் விநியோகம், விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு, மலசல கூடங்கள அமைத்தல் ஆகிய திட்டங்களும் சரவணை மேற்கில் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு, மீன்பிடி உபகரணங்கள் கொள்வனவு, பாடசாலைகளுக்கு மலசலகூடங்கள் அமைத்தல் ஆகிய திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன.

வேலணை கிழக்கு துறையூர் பகுதியில் மலசலகூடங்கள் அமைத்தல், புங்குடுதீவு தெற்கில் நசரேத் விளையாட்டுக் கழகத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு, மதவெளி விளையாட்டு மைதானம் அமைத்தல் ஆகிய திட்டங்களும் -

புங்குடுதீவு வடக்கில் நீர்விநியோக சேவை, மலசலகூடங்கள் அமைத்தல், பாடசாலைகளுக்கான தளபாடங்கள் கொள்வனவு, புங்குடுதீவு மத்தி -வடக்கில் நீர் விநியோகம், விளையாட்டுக் கழகத்திற் கான தளபாடங்கள் கொள்வனவு ஆகிய திட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. (202-111)

# தியான வகுப்புகள்

யாழ்ப்பாணம்,நவ.13

சிவலிங்க யோக கேந்திரா நிலையத்தினர் நடத்தும் தியான வகுப்புகள் நாளை புதன்கிழமை காலை 6.30 மணிக்கு குமாரசாமி வீதி, கந்தர்மடத்தில் உள்ள வேதாந்த மடத்தில் ஆரம்பமாகவுள்ளன.

நிலையத்தின் செயலாளர் சி.சோதிமூர்த்தி தலைமையில் நடைபெறும். இவ் வகுப்புகளில் வளவாளராக யாழ்.போதனா வைத்தியசாலையின் உளவளத் துணையாளர் நா.நவராஜ் கலந்து கொள்வார். (202)

# எரிகாயத்துக்குள்ளான யுவதி சிகிச்சை பலனின்றி மரணம்

யாழ்ப்பாணம்,நவ.13

சமையல் செய்வதற்கு தீ மூட்டிய யுவதி எரிகாயங்களுக்கு ஆளாகி சிகிச்சை பயனின்றி மரணமானார்.

சாவகச்சேரி, சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் வீதியைச் சேர்ந்த தங்கராசா சுஜாஜினி என்ற யுவதியே மரணமானவர் ஆவார்.

சமையல் செய்வதற்காக விறகின் மீது மண்ணெண்ணெய் ஊற்றிவிட்டு தீ மூட்டியபோது யுவதியின் ஆடையில் தீ பற்றிக் கொண்டது. இதனால் எரிகாயங்களுக்கு உள்ளான யுவதி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று சிகிச்சை பலனின்றிக் கடந்த வியாழக்கிழமை இரவு உயிரிழந்தார். (202-207)

# கந்தமுருகேசனார் முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம்

பருத்தித்துறை,நவ.13

புலோலி கந்தமுருகேசனார் சனசமூக நிலைய மாதிரி முன்பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான நிர்மாணப் பணிகள் விரைவில் முன்னெடுக்கப்படும் என வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

மேற்படி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

தொடர்ந்து தகவல் தெரிவிக்கையில் மேலும் கூறியிதாவது :

இந்த முன்பள்ளிக்கென சொந்தமாக காணியில்லாததாலேயே இதுவரை நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கமுடியாதிருந்தது. தற்போது இக் கிராமத்தைச் சேர்ந்த நலன்விரும்பி ஒருவர் முன்பள்ளிக்கென காணியை அன்பளிப்புச் செய்துள்ளார். இதனை அடுத்தே கட்டடம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன - என்றார்.

இவ் விழாவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் முன்னாள் அதிபர் வி.பத்மநாதன், பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.வசீகரன், வைத்திய கலாநிதி எம்.தங்கராஜா, போரூட் திட்ட அமைப்பாளர் திருமதி ஸ்ரீ.தேவிகாராணி ஆகியோரும் கலந்து கொண்டனர். (202-218)

*வெளிமாவட்டங்களிலிருந்து சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் கல்விபயில்வதற்கெனவந்து தமது சொந்தஇடங்களுக்குச் செல்ல முடியாமல் யழ்ப்பாணத்தில் தங்கியுள்ள மாணவர்களுக்குச் செலிங்கோ கூட்டு நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய டாக்டர் லலித் கொத்*



*தலாவலவின் சரண நிதியத்திலிருந்து ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.*

*செலிங்கோ நிறுவனத்தின் யாழ்.கிளை சார்பில் உதவி முகாமையாளர் பி.பி.கபிரியேல் பிறின்ஸ் உதவித் தொகைக்கான காசோலையை கல்லூரி அதிபர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசத்திடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.*

*அருகில் நிறுவனத்தின் சாவகச்சேரி விற்பனை நிலைய உதவி முகாமையாளர் எஸ்.சாந்தகுமாரும் காணப்படுகின்றார்.*

# இராஜவீதி சேதம்; பயணிகள் சிரமம்

கோப்பாய்,நவ.13

நீர்வேலி, கோப்பாய் ஊடாகச் செல்லும் இராஜவீதி சேதமடைந்துள்ளது. இதனால் பயணிகள் சிரமப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ் வீதி சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது. இதனால் இவ் வீதியூடாக அதிகம் பயணம் செய்யும் விவசாயிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்ளவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதன்மூலம் வீதி முற்றாக சேதமடைவதைத் தடுக்கலாமெனவும் பாதிக்கப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (202-72)

# வடமராட்சி சந்தைகளில் நாளுக்குநாள் மரக்கறிகளின் விலைகள் அதிகரிப்பு

உடுப்பிட்டி,நவ.13

வடமராட்சிச் சந்தைகளில் மரக்கறிகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

மரக்கறிச் செய்கைக்குத் தேவையான உரவகைகளைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்ட சிரமத்தால் இம்முறை குறைந்தளவான மரக்கறிகளே பயிரிடப்பட்டதாகவும் - இதனாலேயே மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கத்தரிக்காய், பயிற்றங்காய், பாகற்காய் ஆகியன கிலோ 240 ரூபாவாகவும் -

வெண்டி கிலோ 60 ரூபாவாகவும், கருணைக் கிழங்கு கிலோ 80 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு கிலோ 150 ரூபாவாகவும், வாழைக்காய் கிலோ கிலோ 60 ரூபாவாகவும் -

டுபாய் பூசணி கிலோ40 ரூபாவாகவும், பச்சைமிளகாய் கிலோ 200 ரூபாவாகவும், வெங்காயம் கிலோ40 ரூபாவாகவும், மரவள்ளிக்கிழங்கு கிலோ 15 ரூபா முதல் 40 ரூபா வரையும் நேற்று வடமராட்சிச் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டன. (202- 155)

# பல்துறைசார் மருத்துவ முகாம்

யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம் யாழ். போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை நிறுவனம், பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை ஆகியன இணைந்து நடத்தும் இலவச பல்துறைசார் மருத்துவ முகாம் எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இம் முகாமில் பொது வைத்தியம், சத்திர சிகிச்சை, பெண் நோயியல், மகப்பேற்றியல், சலரோகம் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கும் சிகிச்சையும், வைத்திய ஆலோசனையும் வழங்கப்படும். அத்துடன் ஆய்வுகூடப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். (202-160)

# விவசாய நிலங்களில் பாதீனியம்; மீண்டும் பாதிப்பை ஏற்படுத்துகிறது

உடுப்பிட்டி,நவ.13

குடாநாட்டில் தற்போது பாதீனியத்தின் பரம்பல் அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக வலிகாமம், வடமராட்சி போன்ற பிரதேசங்களிலுள்ள விவசாய நிலங்களிலேயே பெருமளவு பாதீனியம் செழித்து வளர்ந்துள்ளது. இதனால் விவசாயச் செய்கையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

விவசாய நிலங்களில் செழித்து வளரும் இப் பாதீனியத்தால் விவசாய உற்பத்திகளில் பெரும் தாக்கம் ஏற்பட்டு விளைச்சல் பாதிக்கப்படுகின்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலும் விவசாயச் செய்கையை மேற்கொண்டுள்ள நிலையில் பாதீனியத்தால் விளைச்சல் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் மேலும் தெரிவிக்கின்றனர். (202-155)

# வடமராட்சி வலய மட்ட சிறுவர் அரங்கப் போட்டி முடிவுகள்

வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் நடத்திய பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் அரங்கப் போட்டிகளின் இறுதிப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:

✱ கரவெட்டி கோட்டத்தைச் சேர்ந்த நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையின் நாடகம் - ''துணிவே துணை''.

✱ பருத்தித்துறை கோட்டத்தைச் சேர்ந்த கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலையின் நாடகம் - '''சூழலைக் காப்போம்''.

✱ பருத்தித்துறை கோட்டத்தைச் சேர்ந்த தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தின் நாடகம்-''இளவரசன் சிலை''.

✱ வடமராட்சி கல்வி வலயப் பிரிவிலுள்ள மருதங்கேணி கரவெட்டி, பருத்தித்துறை கோட்ட மட்டப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக் கொண்ட 9 பாடசாலைகளின் நாடகங்கள் இறுதிப் போட்டியில் பங்குபற்றியிருந்தன. (202-160)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

13 • 11 • 2007



ரமணீஸ்வரன் - வாகினி தம்பதியரின்
செல்வப் புதல்வன் **மிதுஷாந்** (மிதுக்குட்டி)
இன்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை தனது முதலாவது
பிறந்த நாளை கனடாவில் உள்ள தமது இல்லத்தில்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
மிதுக்குட்டியை கனடாவில் வசிக்கும் அன்பு அப்பா, அம்மா,
ஜேர்மனியில் வசிக்கும் தங்கராசா குடும்பம், வவுனியாவில்
வசிக்கும் தர்மராசா குடும்பம் மற்றும் நீர்வேலியில் வசிக்கும்
அன்பு அப்பம்மா இராசமணி, பாட்டி இலட்சுமி, அம்மம்மா சுசீலா,
அம்மப்பா இரத்தினம் மற்றும் மாமாமார், சித்திமார், அத்தைமார்,
சித்தப்பாமார், பெரியப்பாமார், பெரியம்மாமார் அனைவரும் நீர்வேலி
சப்த கன்னிகள் அருளுடன் சகல
செல்வங்களும் பெற்று பல்லாண்டு
காலம் வாழ்கவென
வாழ்த்துகின்றார்கள்.



**அப்பம்மா**
**இராசமணி.**
நீர்வேலி
வடக்கு.

மிதுஷாந்

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் ஐப்பசி மாதம் 29ஆம் நாள் (15.11.2007) வியாழக்கிழமை காலை **9 மணிமுதல் 10.25** மணிவரையுள்ள தனு லக்கின சுப முகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புதல்வன் | எமது புதல்வி |
| திருநிறைச்செல்வன் | திருநிறைச்செல்வி |
| **செல்வேள்** | **நிசாந்தினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

இறையருள் துணைகொண்டு யாழ்ப்பாணம் ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தான **"ஸ்ரீ லக்சுமி நாராயணன் கல்யாண மண்டபத்தில்"** திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசிர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

**திரு.திருமதி.பத்மநாதன்**
28, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

**திரு.க.அரியரத்தினம்**
உசன், மிருசுவில்.

(இரு வீட்டார் அழைப்பு)
(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

---

# மரண அறிவித்தல்கள்

## கோபாலகிருஷ்ணசாமி சிவபாக்கியம்



கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் சின்னையா கோபாலகிருஷ்ணசாமியின் அன்பு மனைவியும், கிருபைராஜ், ரவிராஜ் ஆகியோரின் அன்புத் தாயாரும், மதிவதனி, தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற சின்னத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் சிவநாதன், சிவதேவி, சிவமணி ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் சிங்காரவேலு ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் சரஸ்வதி, தளையசிங்கம், சற்குணராசா, பரதகுமாரன், இந்திரகுமாரன் ஆகியோரின் மைத்துனியும் விஜயகுமார், விஜயசிங்கம், யசோதா, சீதா, நிமலன், நிசாந்தி, பகீதரன், சசிகரன், ரூபா, சாரு, பானுதி, தினேஸ், இந்திரா மாமியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (67873)

தகவல்:
சின்னையா கோபாலகிருஸ்ணசாமி
(கோபால் - கணவர்).

## சங்கரப்பிள்ளை சிவதாசன் (தேவர்)



காரைநகர், இடைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை சிவதாசன் ஞாயிற்றுக்கிழமை (11.11.2007) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - சின்னாச்சி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற கந்தசாமி - வியாழாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் லோகநாதன், காலஞ்சென்ற லோகநாயகி மற்றும் சிவநாயகி, சற்குணநாயகி, புனிதவதி ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற லலிதா மற்றும் தவராணி, சந்திரன் காலஞ்சென்ற கணேசமூர்த்தி, தில்லைராசா ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

புதுறோட், இடைப்பிட்டி,
காரைநகர் (67875)

தகவல்:
லோகநாதன் (மகன்).

## சிவகுரு உமாகாந்தன்



*(முன்னாள் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளரும், தற்போதைய உயர் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளரும்)*

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காந்தி என்று அன்பாக அழைக்கப்படும் சிவகுரு உமாகாந்தன் (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி சிவகுரு பரம்சோதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் தர்சிகா, தனஞ்ஜெயன் (யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரி 2008 A/L மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி பிரபாவதி கமலநாதன், திருமதி மாலதி வாமசிவன், சிவகாந்தன், கிருஷ்ணகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிவகுருநாதன் சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 9 மணியளவில் வீட்டிலிருந்து பலாலிவீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு அஞ்சலி நிகழ்வுக்காக எடுத்துச் செல்லப்பட்டு மு.ப 11 மணியளவில் அளவில் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

021 222 7219
74, A.V வீதி, கொழும்புத்துறை.

தகவல்:
குடும்பத்தினர்.

---

## கைமாறி விட்டது

பெருமாள் கதிர்காமநாதன் என்பவருடைய பெறுமதிமிக்க முக்கிய ஆவணங்கள் அடங்கிய (நகை வேலைக்குரிய பொருள்கள்) கறுப்புநிற பை (Bag) 11.11.2007 அன்று திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறைமுகத்தில் இறங்கி தெல்லிப்பளை சோதனைச்சாவடிக்கு அண்மையில் கைமாறிவிட்டது. கைமாறி எடுத்தவர்கள் தயவு செய்து 39/3, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(சன்மானம் வழங்கப்படும்) (67886)

## மணமகள் தேவை

இந்து கௌரவகுடும்பம், 1973ஆம் ஆண்டு, அத்தம், பாவம் 12¾ உடைய அரச ஊழியர் கனடா/லண்டன் குடியுரிமை உடைய அழகிய (அன்பு, இரக்கம், நம்பிக்கை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு) நற்பண்புடைய மணமகளைத் தேடுகிறார். தாரம் இழந்த/ விவாகரத்து பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பமுகவரி

WWW ip-rajan@yahoo.com (67877)
C/o உதயன்
விளம்பர இல - 3025

## டுபாயில் வெற்றிடங்கள்
## யூ. ஏ. ஈ.- எம். பி. எம். கம்பனி

(உடனடிப் பயணம்)

| இல | தொழில் | தேவையானோர் | சம்பளம் |
|---|---|---|---|
| 01 | ஆண் சுத்திகரிப்பாளர் | 350 | டினார் 450/- |
| 02 | பெண் சுத்திகரிப்பாளர் | 400 | டினார் 500/- |

### விதிகளும் நிபந்தனைகளும்

இரண்டு வருட ஒப்பந்தம், வேலை நேரங்கள், நாளொன்றுக்கு எட்டு(8) மணித்தியாலங்கள், வாரமொன்றுக்கு 6 நாட்கள், இலவச தங்குமிடம், இலவச மருத்துவம், மற்றும் இலவச உணவு வழங்கப்படும். ஒப்பந்த காலவரை முடிவடைந்ததன் பின்னர் இருவழி விமானப் பயணச் சீட்டு வழங்கப்படும். தகுதிகாண் [illegible] காலவரை 90 நாட்கள்.

* வங்கிக் கடன் வசதிகள் ஏற்பாடு செய்து தரப்படும்.

வயதெல்லை 18-45 அனுபவமுள்ளவர்கள் / பயிலுனர்கள் தமது கடவுச் சீட்டுடன் கீழ்க்காணப்படும் முகவரிக்கு வரவும்.
3வாரங்களுக்குள் பயணம்.
நேர்முகப் பரீட்சைகள் நவம்பர் 20 வரை
மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 7.00 மணிவரை
(ஞாயிற்றுக்கிழமையும்) திறந்திருக்கும்.

* உப முகவர்களும் விண்ணப்பிக்கலாம்

**அராபியன்றோயல்குறூப் (பிறைவேட்) லிமிடெட்**
375, முதலாம் மாடி, ஆர். ஏ. டி. மெல் மாவத்தை
(டுப்பிளிக்கேஷன் ரோட்) கொழும்பு - 03.
தொலைபேசி :-2370653, 2502719
(டேர்டன் வைத்தியசாலைச் சந்தி அருகில் மஹாநாம வித்தியாலயத்துக்குப் பக்கத்தில்)

அனுமதி இல. ஏஎல்/960/விளம்பரம்/03,05/07

**மேலும் தகவல்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள உப முகவரைத் தொடர்புகொள்ளவும்.**

01. மருதமுனை - 03. தொலைபேசி: 077-6968684/077-9027572
02. ஆரையம்பதி - 01. தொலைபேசி: 077-9911503/065-2247715
03. பெரியபோரதீவு(பம்மியடியூற்று) தொலைபேசி: 077-5000474/065-4921964
04. மருதமுனை - 04. தொலைபேசி: 077-7405996/067-2220877
05. கிரான்குளம் -08. தொலைபேசி: 077-5024029/060-2641572
06. குராவத்தை. தொலைபேசி: 077-524554/077-3405643
07. [illegible], இல.22, காங்கேசன் துறை வீதி, [illegible]
[illegible]

---

## 10ஆவது பிறந்த நாள் வாழ்த்தும் பாராட்டுகளும்



2007ஆம் ஆண்டு தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 151 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த **கைதடி எருதிடல் அ.த.க பாடசாலை** மாணவி

### செல்வி ச.லதுசனா

அவர்களை இன்றைய (13.11.2007) பிறந்தநாளில் மேலும் கல்வியில் பல சிறப்புக்கள் பெற்றுச் சிறப்புடன் வாழ வாழ்த்துவதுடன் அவருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், யூப்பிட்டர் கல்விநிலைய ஆசிரியர்கள் அனைவரையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

நவபுரம்,
கைதடி. (67852)

வாழ்த்துவோர்
**தாத்தா, அம்மம்மா, மாமா, அன்ரி, சித்தி.**

## 25 வருட நிறைவின் நினைவில்

| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 23 | 13 |
| ★ | ★ |
| 09 | 11 |
| ★ | ★ |
| 1915 | 1982 |



### செபதேயு லீனப்பு
*(கட்டட ஒப்பந்தகாரர்)*


கடந்த 25 வருடங்களாகத் தெய்வமாய் வீற்றிருந்து எங்களை வழிநடத்தும் எங்கள் அன்பு அப்பையாவே! உங்கள் ஆத்மா சாந்திபெற வேண்டுகிறோம்.

இல 11, மத்தியூஸ் வீதி,
யாழ்ப்பாணம். (67872)

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## அப்பாவுக்காக ஆராதிப்போம்

| பூவுலகு | இறையுலகு |
|---|---|
| 20 | 14 |
| ★ | ★ |
| 01 | 10 |
| ★ | ★ |
| 1949 | 2007 |



### அமரர் மார்க்கண்டு தங்கவேல்

*அன்பு எனும் தீபமதில்*
*அணையாத ஜோதி நீங்கள்*
*இல்லறம் எனும் ஓடம் தடம் புரண்டும்*
*மாறாத மனவேதனையுடனும்*
*மறுவாழ்வு தேடாமல்*
*பிள்ளைகளே தன் சொத்தென வாழ்ந்த*
*எங்கள் அப்பாவின் ஆத்மா சாந்தியடைய*
*நாவலம்பதி வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்*

(67856)

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

உங்கள் பிரிவால் துயருறும்:-
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வலய உதைபந்தாட்டம்: காலிறுதிப் போட்டிகளின் முடிவுகள்

வலி.வடக்கு,நவ.13

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் கால் இறுதி ஆட்டப் போட்டிகள் மிகவும் பரபரப்புகளுக்கு இடையில் முடி வடைந்துள்ளன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் 16 வயதுப் பிரிவின் இரண்டு போட்டிகளும் 18 வயதுப் பிரிவின் நான்கு போட்டிகளும் இடம்பெற்று முடிவடைந்துள்ளன.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தில் 18 வயதுப் பிரிவில் 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்ட இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி வலய மட்டத்தில் முதல் சுற்றிலேயே விலகிக்கொண்டது.

இரண்டாம் இடத்தைப் பெற்ற மாதகல் சென்.ஜோசேப் வித்தியாலயம் முதல் சுற்றில் குழு நிலையில் ஒரு போட்டியில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிடம் 2:0 என்ற கோல்கணக்கில் தோல்வி அடை ந்ததைத் தொடர்ந்து இரண்டாவது போட்டியில் கலந்து கொள்ளாது விலகிக்கொண்டது.

16 வயதுக்கான கால் இறுதிப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றன.

அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயத்திற்கும் இடையிலான போட்டியில் அருணோதயாக் கல்லூரி 5:0 என்ற கோல்க் கணக்கில் தமிழ் கந்தையா வித்தியாலயத்தை வெற்றிகொண்டது.

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரிக்கும் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி 2:0 என்ற கோல் கணக்கில் புனித கென்றியரசர் கல்லூரியை வெற்றி கொண்டது.

18 வயதுப் பிரிவில் மகாஜனக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் மகாஜனக் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயத்திற்கும் வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் ஸ்ரீ முருகன் வித்தியாலயம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கும் அராலி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான போட்டியில் வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் 6:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரிக்கும் இடையிலான போட்டி சமநிலையில் முடிந்தது. இதனையடுத்து சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் அருணோதயாக் கல்லூரி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற 16 வயதுப் பிரிவுப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் அராலி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான ஆட்டத்தில் யூனியன் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை உடைப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(50-86)

# தேவரையாழி இந்துக் கல்லூரி 16, 18 வயதுப் பிரிவுகளில் சம்பியன்



கரவெட்டி,நவ.13

வடமராட்சி வலய பாடசாலை அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் 16, 18 வயதுப் பிரிவுகளில் தேவரையாழி இந்துக்கல்லூரி சம்பியனானது.

இறுதிப் போட்டி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மேற்படி இறுதிப் போட்டியை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராசா ஆரம்பித்து வைத்தார்.

## விளையாட்டு

18 வயதுப் பிரிவின் இறுதிப் போட்டியில் தேவரையாழி இந்துக் கல்லூரியும் நெல் லியடி மத்திய மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன. இந்தப் போட்டி 1:1 என சமநிலையில் முடிவுற்றது. இதனையடுத்து வழங்கப்பட்ட சமநிலை உடைப்பு உதை மூலம் தேவரையாழி 3:2 என்ற கோல் கணக்கில் நெல்லியடி மத்திய மகா வித்தியால யத்தை வெற்றி கொண்டு சம்பியனானது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் கர வெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் அல் வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் மோதிக் கொண்டதில் அல்வாய் வடக்கு றோமன் கத் தோலிக்கப் பாடசாலை 2:1 என்ற கோல் கணக்கில் வென்று மூன்றாம் இடத்தைத் தட்டிக் கொண்டது.

16 வயதுப் பிரிவினருக்கு இடையிலான இறுதிப் போட்டியில் தேவரையாழி இந்துக் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் தேவரையாழி இந்துக் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் நெல்லியடி மகா வித்தியாலயத்தை வென்று சம்பியனானது. இரண்டாம் இடத்தை நெல்லியடி மத்திய மகாவித்தி யாலயமும், மூன்றாம் இடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாட சாலையும் பெற்றுக் கொண்டன. (50-70)

# குருப்பெயர்ச்சி உங்களுக்கு எப்படி...?

**(15.11.2007 முதல் 29.11.2008 வரை) - சோதிடர் கிருஷ்ணா.**

## கன்னி

உத்திராடம் 2,3,4, அஸ்தம் 1-4 சித்திரை 1-2

உங்கள் ராசிக்கு 4 இல் குரு வருகிறார். வீட்டுப் பிரச் சினைகள் தீரும். சிலருக்கு வீடு வாங்கும் யோகமுண்டு. வீடு மாற்றம், வாகன மாற் றம் சிலருக்கு நடக்கும். தாயார் உடல் நிலை நன்றாகும். குருவின் பார்வை உங் கள் ஆயுள் ஸ்தானத்தை பார்ப்பதால் உங்கள் உடல் நலம் நன்றாகும். கடன்கள் தீரும். சில வழக்குகளும் தீரும். தொழில் ஸ்தான பார்வையால் தொழில் நன்றாகும். புதிய தொழில் துவங்க வாய்ப்பு கிடைக்கும். தொழிலாளர்கள் பிரச்சினை தீரும். 12 இல் இருக்கும் சனியும், கேதுவும் தூக்கமின்மை இருந்தாலும் குரு வழிபாடுகள் செய்ய நிம்மதி கிடைக்கும். கணவன், மனைவி உறவுகள் நன்றாகவே இருக்கும். மக்களின் கல்வி செலவு கூடும். படிப்பில் தேக்க நிலை தென்படும். சந்திர வழிபாடு விபத்துக்களைக் குறைக்கும். தொழிலாளர்கள் பிரச்சினை தோன்றும். நண்பர்கள், சகோதரர்கள் உதவுவார்கள். சிலருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். அம்மனுக்கு மாகாப்பு, சிகப்பு மாலை சாத்துதல், நெய்விளக்கு ஏற்றுதலால் சில நன்மைகள் தரும். கால், கை குறைபட்டவர்களுக்கு உதவ நன்மைகள் கூடும். நிம்மதியும் கிடைக்கும். தகப்பனார் வழி செலவுகள் சிலருக்கு கூடும். அவர்களுக்கு தொண்டு செய்வது நன்மையளிக்கும். வெளியூர் பயணங்களில் முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ளவும். திருடு, களவு போக இடமுண்டு. அதனால் யாத்திரை சமயங்களில் கவனமாக இருக்க வேண்டும். சிலருக்குத் திடீர் லாபங்கள் லாட்டறி யோகமுண்டு. சிலருக்குப் பொலிஸ், ஆயுதப் படையில் சேரவும் வாய்ப்பு உண்டு. அதிஷ்ட திகதிகள்: 9,3,4,18,27, 31.

**பெண்களுக்கு:-** இந்த குருப் பெயர்ச்சியானவுடன் குரு பகவான் உங்கள் ராசிக்கு 4 ஆம் இடத்தில் வருகிறான். உங்களை வியப்பில் வைக்கப் போகிறார். 22.11.2007 முதல் 09.05.2008 வரைக்கும் மிகவும் விசேஷமாக இருக்கும். நீங்கள் கஷ்டப்பட்டதற்கெல்லாம் விடிவு காலம் கிடைக்கப் போகிறது. எல்லா விதத்திலும் உங்களுக்கு நன்றாகவே இருக்கும். உடல் நலத்தில் ஆரோக்கியம் கிடைக்கும். சுறுசுறுப்பாகச் செயல்பட்டு காரிய வெற்றி காண்பீர்கள். வேலை தேடும் பெண்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும். தடைப்பட்டு வந்த அனைத்து காரியங்களும் விரைவில் நடந்தேறும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், சந்தோஷமும் காணப்படும். பண வரவு நன்றாக இருக்கும். புதிய ஆடை, ஆபரணச் சேர்க்கைகள் வந்து வேரும். பூர்வீக சொத்துக்கள் தேடி வந்துசேரும். ஒரு சில பெண்களுக்கு சொந்தமாகப் புதிய வீட்டில் போகும் யோகம் உண்டாகும். கணவன், மனைவி சந்தோஷமாக இருப்பார்கள். இந்தக் குருப் பெயர்ச்சி நல்ல முன்னேற்றமாக இருக்கும. குரு பகவான் வக்கிர காலத்தில் 10.05.2008 முதல் 07.09.2008 வரை சின்ன பிரச்சினைகள் சிக்கல்கள் வந்து போகும். பின்பு 08.09.2008 முதல் 08.10.2008 வரை ராஜயோகம்தான்.

**மாணவர்களுக்கு:-** இந்தக் குருப் பெயர்ச்சியால் தடைப்பட்டு வந்த படிப்புகள் எல்லாம் இப்போது வெற்றி அடையும். இந்த வருஷம் நல்ல மதிப்பெண்கள் பெறுவதற்கு வகுப்பிலே முதல் மாணவர்களாக வரும் யோகம் உண்டு. விடாமுயற்சியும், படித்தால் வெற்றி எளிதில் வந்து வேரும். மேல் படிப்பு தொடருவதற்கான வாய்ப்புகள் 4 ஆம் இட குரு பகவானால் வந்து சேரும். நண்பர்களும் நல்ல நண்பர்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் வீண் பிரச்சினைகள் உங்களைத் தேடிவரும்.

**அரசாங்க வேலை செய்வோருக்கு:-**

இந்த குருபெயர்ச்சி உங்களுக்கு மிகவும் சிறப்பாக இருக்கும். தடைபட்டு வந்த காரியங்கள் எல்லாம் கைகூடி மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும். சிலருக்கு அரசாங்கச் சலுகைகள் கிடைக்கும். இந்தக் காலத்தில் பெயர், புகழ், கௌரவம், அந்தஸ்த்து கூடி வசதி வாய்ப்புகள் பெருகும். எதிர்பார்த்து காத்துக் கிடந்த காரியங்கள் உங்களைத் தேடிவரும். சொந்த வீடு, சொந்தக் கார் வாங்குவதற்கான சந்தர்ப்பங்கள் வரும். உத்தியோகத்தில் முன்னேற்றம் காணப்பட்டு வருமானம் உயரும் வாய்ப்புகள் உண்டு. அரசியல் ஆதாயம் கிடைக்கும். எல்லாவிதத்திலும் வெற்றி உங்களைத் தேடி வரும்.

**சொந்தத் தொழில் செய்வோருக்கு:-**

இந்த குருபெயர்ச்சி உங்களுக்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் வருமானத்தைத் தரப்போகிறார். இந்தக் குருப்பெயர்ச்சி உங்களுக்கு மிகவும் விசேஷமாகும். பழைய தொழில் விருத்தி அடையும். புதிய தொழில் தொடங்குவதற்கான சந்தர்ப்பங்கள் நிறைய வரும். உங்களது நீண்ட கால ஆசைகள் நிறைவேறி விடும். இந்தக் காலத்தில் தொழிலுக்காக வண்டிகள், வாகனங்கள் வாங்கும் வாய்ப்புகள் நிறைவேறும். எதிர்பாராத திருப்பு முனைகள் ஏற்பட்டு வாழ்க்கைத் தரம் உயரும். சொத்துக்கள் வாங்கும் ஆசைகள் நிறைவேறும். 10.05.2008 முதல் 07.09.2008 வரை சிறு சிறு விரயங்கள் வரலாம். தொழில் மந்தமாகவும் காணப்படும். பின் 08.09.2008 முதல் மீண்டும் உங்கள் காட்டில் மழைதான்.

# படையினரை உள்ளே வரவிட்டு புலிகள் உக்கிரமாகத் தாக்கியுள்ளனர்

## முகமாலைத் தாக்குதல் குறித்து ஆய்வாளர் கருத்து

முகமாலையில் அரச படைகள் கடந்த புதன்கிழமை ஆரம்பித்த போர் நடவடிக்கையின்போது அவர்களை குறிப்பிட்ட அளவு வெகுதூரம் வரை உள்ளே தமது பகுதிக்குள் வர அனுமதித்த பிறகே புலிகள் தமது உக்கிரமான எதிர்த்தாக்குதலை முடுக்கிவிட்டுப் படையினரைத் திரும்பிப் போகச் செய்துள்ளனர் என்று ''சண்டே ரைம்ஸ்'' ஆங்கில வார ஏட்டில் பாதுகாப்புத் துறை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் தமது வாராந்த ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையின் முக்கிய பகுதி வருமாறு:-

பிரகடனப்படுத்தப்படாத நாலாம் கட்ட ஈழப்போர் உக்கிரமடைந்து வருகையில் அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளும் செயற்பாட்டில் உள்ளன. 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்பாடு, அதனைக் கண்காணிக்கும் கண்காணிப்புக்குழு, அமைதி நடவடிக்கைகள் என்பனவே அவை. இவை மூன்றும் தமது இறுதி மூச்சை இழுத்துக்கொண்டு இருக்கின்றன.

ஆனால் அரசும் விடுதலைப் புலிகளும் உக்கிரமான மோதல்களில் இறங்கியுள்ளன. கடந்த புதன்கிழமை அதிகாலைக்கு முன்னர் படையினர் தமது முன்னணி நிலைகளில் இருந்து முகமாலையில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலைகளை நோக்கி முன் நகர்ந்தனர். இது சிறிலங்காவின் பிரதான நிலப்பரப்பை யாழ்.குடாநாட்டுடன் இணைக்கும் வடபகுதியின் முடிவில் உள்ளது.

கிளிநொச்சியின் திசையில் முன் நகர்வதே நடவடிக்கையின் நோக்கம். விடுதலைப் புலிகளின் முன்னணி அரண்களை அடைந்த படையினர் மேலும் முன்னகர முற்பட்டவேளை விடுதலைப் புலிகள் இயந்திரத் துப்பாக்கிகள், உந்துகணை செலுத்திகள், மோட்டார்கள் என்பவற்றைக் கொண்டு கடுமையான தாக்குதலைத் தொடுத்தனர். கடுமையான சமர் மூண்டது.

### நெருக்கடிக்குள் சிக்கினர்

படையினர் பெரும் நெருக்கடிக்குள் சிக்கினர். காயமடைந்த மற்றும் பொறிவெடிகளில் சிக்கிய தமது சகாக்களுக்கு உதவ முற்பட்டிருந்தவேளை துப்பாக்கிச் சூடுகளிலும் பொறிகளிலும் படையினர் சிக்கினர். விடுதலைப் புலிகள் கடுமையான தாக்குதலை ஆரம்பிக்க முன்னர் குறிப்பிட்ட அளவு தூரம் தம்மை அனுமதித்துள்ளனர் என்பதைப் படையினர் பின்னர் அறிந்து கொண்டனர். எனவே பின்வாங்குவதே முக்கிய தெரிவாக இருந்தது. படையினர் தமது நிலைகளுக்குப் பின்நகர்ந்தனர்.

விடுதலைப் புலிகளின் அதிர்ச்சிகரமான தாக்குதலைத் தொடர்ந்து அவர்கள் பின்வாங்கியிருந்தனர். இது வழமையாக நடைபெறும் ஒன்று. பின் வாங்கும் படையினர் மற்றொருநாள் தம்மைப் பலப்படுத்திக் கொண்டு தாக்குதலில் ஈடுபடலாம்.

படையினர் முகமாலையின் தென்பகுதியைக் கைப்பற்றியிருந்தால் சில நிமிடங்களில் அந்தச் செய்தியை நாடு அறிந்திருக்கும். ஏனெனில் மில்லியன் கணக்கான மக்கள் தொலைக்காட்சியில் பார்த்துக் கொண்டிருக்க வரவு - செலவுத் திட்ட உரையை நிகழ்த்திக் கொண்டிருந்த மகிந்த ராஜபக்ஷ தனது உரையை இடையில் நிறுத்தி அந்த வெற்றிச் செய்தியை அறிவித்திருப்பார் என் பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அது நடைபெறவில்லை. காலை 5.30 மணிக்கு முன்நகர்ந்த படையினர் மூன்று மணிநேரத்தில் தமது பழைய நிலைகளுக்குத் திரும்பியிருந்தனர்.

### இழப்புக்கள் அதிகம்

தமது தரப்பில் 11 பேர் கொல்லப்பட்டதாகவும், 41 பேர் காயமடைந்ததாகவும் படையினர் தெரிவித்திருந்தனர். ஆனால் இழப்புக்கள் அதிகமானவை. எனினும் அதனை நாங்கள் இங்கு தரவில்லை. ஏனெனில் அரசு துரோகி என்ற மகுடத்தை எமக்குச் சூட்டிவிடும்.

2002 ஆம் ஆண்டு உருவான போர் நிறுத்தத்தின் பின்னர் படையினர் முகமாலையில் மேற்கொண்ட இரண்டாவது பெரும் படை நடவடிக்கை இதுவாகும். கடந்த ஆண்டு ஒக்ரோபர் 11 ஆம் திகதி டாங்கிகள், துருப்புக்காவி வாகனங்கள் சகிதம் படையினர் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தனர். கிபிர் விமானங்களும் தாக்குதலை நடத்தியிருந்தன. ஆனால் இந்தச் சமரில் 133 இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், 483 பேர் காயமடைந்திருந்தனர். அவர்களில் 283 பேர் போருக்குத் திரும்பமுடியாத அளவிற்குக் காயமடைந்திருந்தனர்.

கிழக்கைப் படையினர் கைப்பற்றிய பின்னர் வடபகுதி நோக்கி போர் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன. கடந்த ஜீலை மாதத்தில் இருந்து ஓமந்தைக்கு மேற்காக மோதல்கள் தீவிரமடைந்து வருகின்றன. ஆனால் விடுதலைப் புலிகள் அங்கு கடும் எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10ஆவது பிறந்தநாள் வாழ்த்தும் பாராட்டும்



யாழ்/கோண்டாவில் இந்து மகா வித்தியாலய
மாணவன்

### கமலதாஸ் பிரபாகரச்சோழன்

தனது 10ஆவது பிறந்தநாளைக் கொண்டாடும் இன்றைய நன்நாளில் 2007இல் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 163 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்ததை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவரை வழிகாட்டி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் துணைகொண்டு பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

*வாழ்த்துவோர்:* அம்மா, அப்பா, தங்கை தமிழரசி, அப்பம்மா, சித்தப்பா, சித்தி, அம்மம்மாமார், அப்பப்பாமார், அம்மப்பா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், பேரியப்பா, பேரியம்மா, அக்காமார், அண்ணா கபில்.

*இணுவில்.*
*(67865)*

## சுந்தரத் தமிழனுக்கு சுவர்க்கத்தில் அமுதவிழா



அமரர்

### அ.பஞ்சாட்சரம்

அன்னைமடி
13 ✱ 11 ✱ 1927

இறைவனடி
02 ✱ 10 ✱ 2007

*உரும்பை நகருதித்து*
*கருமத்தை மேலென்றெண்ணி*
*வருணத்தை மேலெழச் செய்து*
*கருணாகரனைச் சென்றடைந்த எங்கள் அப்பா!*

*புண்ணியத்தை மேலென்றெண்ணி*
*கண்ணியத்தைக் கட்டிக் காத்து*
*மண்ணினில் செய்த மாபெரும் பணியை*
*எண்ணியெண்ணி ஏங்குகின்றோம் அப்பா!*

*எண்பதாவது அகவையை எம்முடனே பகிராது*
*மாண்புடனே சுவர்க்கத்தில் கொண்டாட எண்ணியதேன்*
*கண்ணுக்கினிய மனையாள் மக்களைத் தவிக்கவிட்டு*
*கண்ணான எங்கள் அப்பா எங்கே சென்றீர்கள்*
*எண்பதாவது அகவையிலே எண்ணியெண்ணி ஏங்குகிறோம்.*

உரும்பிராய் மேற்கு, உரும்பிராய். *(67793)* **அருமை மகள் வாசுகி.**

## சேக்கிழார் விழாவையொட்டிய போட்டிகளின் முடிவுகள்

சேக்கிழார் விழாவையொட்டி இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் அறநெறிப் பாடசாலைகளிடையே பல்வேறு போட்டிகளை நடத்தியது. தென்மராட்சிப் பிரதேச போட்டி முடிவுகள் வருமாறு:

**பேச்சு**

*கீழ்ப்பிரிவு:* சூ.சித்திர்லா(மட்டுவில் மகா முத்துமாரி அம்மன் அ.பா.), தே. அனோஜினி (சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அ.பா.), கோ.தயாளினி (மிருசுவில் அரசடிப்பிள்ளையார் அ.பா.)

*மத்தியபிரிவு:* ப.சர்வோதினி (கொடிகாமம் தவசிக்குளம் கண்ணகையம்மன் அ.பா.), ஜெ. பிறின்ஸ் (நுணாவில் வீரபத்திரர் அ.பா.), க.துருவாசன் (மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி அ.பா.), இ.கபிலினி(கிராம்புவில் பாலமுருகன் அ.பா.).

*மேற்பிரிவு:* செ.துர்க்காஜினி(மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி அ.பா.), தி.ஆரணி (மட்டுவில் மகா முத்துமாரி அம்மன் அ.பா.), சி.அகல்யா (மீசாலை இந்துமன்ற அ.பா.).

**கட்டுரை**

*கீழ்ப்பிரிவு:* ரா.ரஜிந்தன்(சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அ.பா.), அ.சர்மினி (தவசிக்குளம் கண்ணகை அம்மன் ஆலய அ.பா.), இ.இராகவி (சங்கத்தானை இத்தியடி இந்து இளைஞர் மன்ற அ.பா.).

*மத்தியபிரிவு:* க.சுகந்தினி( சங்கத்தானை இத்தியடி இந்து இளைஞர் மன்ற அ.பா.), ச.வர்மிளா (தவசிக்குளம் கண்ணகை அம்மன் ஆலய அ.பா.), சி. அபிராமி(சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அ.பா.), ச.யதீசன் (அல்லாரை அறுகம்புலம் மகாகணபதிப்பிள்ளையார் அ.பா.).

*மேற்பிரிவு:* சி.கஸ்தூரி (மீசாலை இந்து மன்ற அ.பா.), தே. சத்தியகௌரி (அல்லாரை அறுகம்புலம் மகாகணபதிப் பிள்ளையார் அ.பா.), ஸ்ரீ.யதுர்ஸ்சன் (கிராம்புவில் பாலமுருகன் அ.பா.).

**சமய அறிவுப்போட்டி**

*கீழ்ப்பிரிவு:* சி.லோகிதன்(அல்லாரை அறுகம்புலம் மகாகணபதிப்பிள்ளையார் அ.பா.), உ.விதுஷா (சாவகச்சேரி ஸ்ரீ பழனியாண்டவர் அ.பா.), யோ.ரக்சனன் (கச்சாய் கண்ணகை அம்மன் அ.பா.).

*மத்தியபிரிவு:* த.அமிர்தவர்சினி (சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் அ.பா.), ப.சர்வோதினி(தவசிக்குளம் கண்ணகை அம்மன் ஆலய அ.பா.), ச.தர்சிகா (சாவகச்சேரி ஸ்ரீ பழனியாண்டவர் அ.பா.).

*மேற்பிரிவு:* இ.சுபிதா (மட்டுவில் ஸ்ரீ நாராயணன் அ.பா.), த. ஆதவன்(மிருசுவில் அரசடிப் பிள்ளையார் அ.பா.), க.பிருத்திகா (அல்லாரை அறுகம்புலம் மகாகணபதிப்பிள்ளையார் அ.பா.).

**நாடகம் - திறந்த போட்டி**

தவசிக்குளம் கண்ணகை அம்மன் ஆலய அ.பா, மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி அ.பா. (202)

## 90ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

### சீனிவாசம் ஜெயாகரன்

(ஜெயா)

| நெஞ்சம் மகிழ | நெஞ்சம் நெகிழ |
|---|---|
| 31 ✱ 08 ✱ 1978 | 16 ✱ 08 ✱ 2007 |

**திதி: 13.11.2007**


*சீனிவாசம் ஜெயாகரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். இந்த ஆத்மாசாந்திப் பிரார்த்தனையில் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.
(67870)

ஆறாத்துயருடன்:
கமலாங்கனி - *மனைவி.*
மஜீவன், மதிவன், கம்சனா - *பிள்ளைகள்.*

## 31ஆம் நாள் நினைவாக...

பூவுலகு
20 ✱ 01 ✱ 1949



இறையுலகு
14 ✱ 10 ✱ 2007

### அமரர் மார்க்கண்டு தங்கவேல்


அன்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
மகத்தான பண்புகொண்டு
மாறாத அமைதியோடும்
நிலையற்ற தரணியில் வாழ்ந்தது போதுமென்று
பாதி வழிதனிலே எம்மையெல்லாம்
பரிதவிக்கவிட்டு சென்றதேனோ?

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஏழாலை கிழக்கு,*
*ஏழாலை.* *(67858)*

**சுப்பிரமணியம் குடும்பத்தினர்.**
*(சின்னத்தம்பி).*

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



**அமரர்**

**திருமதி ஐயாத்துரை இலட்சுமி**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 16.06.1927 | 15.10.2007 |

எமது தாயார் பல வருட காலமாக புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு இருந்தார். முதன்முதலில் யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர் எம்.ஜெயக்குமார் பண்ணாகம் மாதர் சங்கத்திற்கு வருகை தந்தபோது எமது அன்னை நோயினால் பாதிக்கப்பட்டு இருப்பது அறிந்து தனது சாரதியான ஸ்ரீராமுடன் வீட்டுக்கு வருகைதந்து நோயினை இனங்கண்டு கொண்டார். அதன்பின் யாழ்.போதனா வைத்தியசாலை சிகிச்சைப் பிரிவுக்கு வரவழைத்து சிகிச்சை அளித்தார். எமது அன்னை சிகிச்சை எதுவும் வேண்டாம் என டாக்டருடன் அடம்பிடிப்பது வழக்கம். அதேவேளை தனது அன்பு, பாசம், அரவணைப்பு அத்தனையையும் அன்னைக்கு அளித்து இறுதிவரை சங்கானை அரசினர் வைத்தியசாலையில் தனது சிகிச்சைப் பிரிவினை ஏற்படுத்தியபோது பல வருட காலம் அன்னையை இவ்வுலகில் வாழ இடமளித்தார். அன்னை கதிர்வீச்சு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டபோது பராமரித்த டாக்டர்கள், தாதிமார், தொழிலாளர்கள் அனைவருக்கும் எமது நன்றியினைச் செலுத்துகின்றோம். மேலும் 15.10.2007 எமது அன்னையின் மரணச்செய்தியினை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தவேளையில் எமது வேண்டுகோளை ஏற்று உதயன் பத்திரிகை நிறுவனம் விளம்பரம் பிரசுரித்தமைக்காகவும் இறுதிக்கிரியைகளில் இறுதிவரை பங்கேற்ற தொலைத்தொடர்வு நிலைய முன்னாள் ஊழியர்கள், தற்போதைய ஊழியர்கள், போக்குவரத்துச் சபை ஊழியர்கள் மற்றும் உதவி ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த கிரியை அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று, நாளை (14.11.2007) புதன்கிழமை திருமதி ஐயாத்துரை இலட்சுமி அவர்களின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

ஐ.கெங்காதரன்.
(முன்னை நாள் தொலைத்தொடர்பு ஊழியர்)

**திருமதி ஐயாத்துரை இலட்சுமி அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை புதன்கிழமை 14.11.2007 எமது தாயாரின் இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.**

**தாய்யார் பலவருடகாலமாக வாழ்ந்த மகன் செல்வராசாவின் டென்மார்க் இல்லத்திலும் கிரியைகள் இடம்பெறும்.**

[illegible] தெற்கு, பண்டத்தரிப்பு.

அமைப்பு வானவில், பண்டத்தரிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# சொல்லில் கூறும் நிதர்சனத்தை செயலில் உணர்த்த முயலுங்கள்!

"இலங்கையில் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு இராணுவ வழிகளில் கிட்டாது. சமாதானப் பேச்சின் ஊடாகவே அது எட்டப்பட வேண்டும்."

- இவ்வாறு தெளிவாகவும் வெளிப்படையாகவும் கொழும்பில் வைத்துப் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றார் இந்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சர் ப. சிதம்பரத்தின் கூற்று இரண்டு வழிகளில் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒன்று, நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வருவதற்கு முதல்நாள் அவர் சென்னையில் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியைச் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே கொழும்புக்குப் புறப்பட்டார். அந்தப் பின்புலத்திலேயே இராணுவத் தீர்வுக்கு வாய்ப்பில்லை, அமைதிப் பேச்சு மூலமான தீர்வே இறுதிவழி என்று அழுத்தம் திருத்தமாக சிதம்பரம் குறிப்பிட்டிருக்கின்றார் என்பது கவனிக்கத்தக்கது.

அடுத்தது, இலங்கை விவகாரத்தில் நேரடியாக இராணுவ ரீதியில் தலையிட்டு சூடுபட்டுத் தெளிந்த முன்னைய இந்திய அரசிலே சிதம்பரமும் இடம் பெற்றிருந்தவர் என்பதால் அவரது பட்டறிவுப் பாடமும் கவனத்தில் கொள்ளத்தக்கது.

1987 இல் இலங்கை விவகாரத்தில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் அரசு நேரடியாகத் தலையிட்டபோது ராஜீவுக்கு நெருங்கியவராக அந்த அரசில் சிதம்பரமும் இடம்பெற்றிருந்தார்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான தமிழர் பக்கத்தின் ஏற்றுக் கொள்ளக்கூடிய இணக்கப்பாடு இன்றியே, தான் விரும்பிய - உருப்படியற்ற - உப்புச்சப்பற்ற - திட்டம் ஒன்றை தீர்வுக்கான மார்க்கமாக இலங்கை மீதும் ஈழத் தமிழர் மீதும் வல்வந்தமாகத் திணிக்க முயன்றது ராஜீவின் இந்திய அரசு. பேச்சு மூலமான தீர்வு என்றும், இலங்கை - இந்திய ஒப்பந்தம் மூலமான சமாதானத் திட்டம் என்றும் அது அடையாளப்படுத்தப்பட்டாலும் கூட, அது இராணுவ மார்க்க வழியிலேயே தமிழர்கள் மீது கட்டாயமாக - பலவந்தமாக - திணிக்கப்பட்டது. அந்த வகையில் அதுகூட ஒருவித இராணுவத் தீர்வு முயற்சியாகவே கடைசியில் கட்டவிழ்ந்தது.

பல லட்சம் இந்தியத் துருப்புக்களைக்கொண்டு வந்து தமிழர் தாயகத்தில் குவித்து, அதை ஆக்கிரமித்து, சுமார் இரண்டரை வருடகாலம் நிலைகொண்டிருந்தும் கூட, ஆயுத முனையில் தன்னும் - சமாதானத்திட்டம் என்று பெயரிட்டும் கூட - அந்த முயற்சியை நடைமுறைச் சாத்தியமாக்கவே முடியவில்லை என்ற பட்டறிவு, ராஜீவின் அந்த அரசில் இடம்பெற்றிருந்த சிதம்பரம் போன்ற மூத்த தலைவர்களுக்கு நிறையவே உண்டு. அந்த அனுபவப் பாடம்தான் இப்படி யதார்த்தத்தை - நிதர்சனத்தை - பேசும்படி சிதம்பரத்தைத் தூண்டியிருக்கும் என்று கருதலாம்.


மஹிந்த ராஜபக்ஷவின் அரசுத் தலைமை யுத்த சந்நதம் கொண்டு, போர்வெறி உருவேறி, களச்சமருக்கான முரசும் கொட்டத் தயாராக இருக்கின்றது. இப்போது அதன் சிந்தனையும், இலக்கும், நோக்கும், குறிக்கோளும் ஒன்றே ஒன்றுதான். அது, போரியல் ரீதியாகப் புலிகளை அடக்கி, ஒடுக்கி, அரசின் காலில் விழவைத்து, இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளில் தமிழர்களின் பேரம் பேசும் வலுவை அடியோடு தகர்த்து, அதன் பின்னர் தான் பிச்சையாகப் போடும் தீர்வுத் திட்டத்தை சிறுபான்மையினரான தமிழருக்கு அடிமைச்சாசனமாக வழங்கி, தமிழினத்தை நிரந்தரமாகவே இலங்கைத் தீவின் இரண்டாந்தரப் பிரஜைகளாக்குவது என்பதுதான்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதி வழித் தீர்வைக்காணும் எண்ணம் இலங்கையின் தற்போதைய அரசுத் தலைமைக்குக் கிஞ்சித்தும் கிடையாது என்பதும், அது முற்றும் முழுதாக இராணுவத் தீர்வு வழியை நோக்கி முழு மூச்சில் நகர்ந்து கொண்டிருக்கின்றது என்பதும் உலகறிந்த பரகசியம்.

அத்தகைய அரசுக்கு, இராணுவ ஒத்தாசைகளை வழங்கி, ஆயுத உதவிகளையும், உளவுத் தகவல் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துக்கொண்டு, மறுபுறத்தில் பேச்சளவில் - உதட்டளவில் - 'இராணுவ வழித் தீர்வு சாத்தியமற்றது. ஆகவே அமைதி வழியில் நிரந்தரத் தீர்வை நாடுங்கள்' என - வாயால் மந்திரம் செபிப்பதில் அர்த்தமோ, பயனோ கிடைக்கப்போவதில்லை.

இப்போது அமைச்சர் சிதம்பரம் தாம் கொழும்பில் உரைத்த யதார்த்தத்தை, இலங்கை அரசுத் தலைமைக்கு உறைப்பாக உரைப்பதற்கு தாம் நிதி அமைச்சராக இருக்கும் இந்திய அரசு மூலம் காத்திரமான நடவடிக்கை எடுக்கச் செய்யவேண்டும். அதைச் செய்வதை விடுத்து, நினைவுப் பேருரைகள் ஆற்றும் சாக்கில் இலங்கைத் தீவையும் இந்தத் தீவின் மக்களையும் பார்த்துப் போதனை செய்து, தத்துவம் கூறுவதில் அர்த்தமில்லை; பயனில்லை.

தமது அரசு வழங்கும் ஆயுத, இராணுவ ஒத்தாசை, உளவு உதவி என்பனவே இலங்கை அரசுத் தலைமையை பயன்தரவே மாட்டாத இராணுவ வழித் தீர்வு முயற்சிகளை நோக்கி உந்தித் தள்ளக் காரணம் என்ற உண்மையை சிதம்பரம் போன்ற இந்திய அரசின் மூத்த தலைவர்கள் உணர்வார்களேயானால், தாம் இப்போது சொல்லில் கூறும் நியாயத்தை இலங்கை அரசுத் தலைமைக்கு செயலில் உணர்த்திக் காட்டுவதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கைகளை தமது அரசு மூலம் எடுக்கச் செய்வித்து, இப்பிரச்சினையின் தீர்வுக்குக் காத்திரமாகப் பங்களிப்பர் என எதிர்பார்க்கலாம். அது நடக்குமா? .... பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!



சேதமாக்கப்பட்ட வகுப்பறைத் தளபாடங்கள், அடித்து நொறுக்கப்பட்ட கல்லூரியின் வழிபாட்டறை, வெட்டிசாய்க்கப்பட்ட மாணவர் நடுகை செய்த வாழை மரங்கள். (படங்கள் :- நேசன்)

## இணுவில் இந்துக் கல்லூரியில் நாசவேலை; கும்பல் ஒன்று ஞாயிறு இரவு அட்டகாசம்!

யாழ்ப்பாணம், நவ. 13

இணுவில் இந்துக் கல்லூரிக்குள் நேற்று முன்தினம் இரவு புகுந்த கும்பல் ஒன்று, அங்கு அடாவடித்தனம் புரிந்து பெரும் சேதங்களை ஏற்படுத்தி உள்ளது.

வகுப்பறைகளின் கதவுகளை கொத்தியும் அதிபரின் அலுவலகத்தில் இருந்த ஆவணங்களை எரித்தும் கணனி அறை, உணவுச்சாலை என்பன உடைத்தும் நாசம் செய்யப்பட்டுள்ளன.

கல்லூரியில் பயிலும் விவசாய மாணவர்கள் செய்கைபண்ணிய வாழைத் தோட்டத்தில் நின்ற வாழை மரங்கள் வெட்டிச் சாய்க்கப்பட்டன.

மாணவர்களின் வழிபாட்டிடத்திலுள்ள சுவாமிப்படம் மற்றும் பொருள்கள் என்பன உடைக்கப்பட்டன. கணனி அறைக் கண்ணாடிகளும் நொறுக்கப்பட்டன.

இந்த நாசவேலை குறித்து கல்லூரி அதிபர் நேற்று காலை சுன்னாகம் பொலீசாருக்கு முறைப்பாடு செய்தார்.

பொலீஸார் உடன் வந்து விசாரணைகளை நடத்தினர். அருகிலுள்ள வீடுகளிலும் விசாரித்தறிந்தனர்.

(அ-1-68)

## யுனிசெவ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

***தென்னைமரம் வெட்ட 4 லட்சம் ரூபா***

யுனிசெவ் நிறுவனம் ஏதாவதொரு அமைப்புக்கு நிதி உதவி வழங்கும் போது முதல் முறை வழங்கிய நிதி செலவு செய்யப்பட்டவிதம் தொடர்பான முறையான அறிக்கை ஒன்று இல்லாமல் இரண்டாம் முறை நிதி வழங்காது. தமக்குக் கிடைத்த பணம் செலவழிக்கப்பட்ட விதம் தொடர் பாக ஒப்படைத்திருந்த அறிக்கையொன்றில் தென்னை மரமொன்றை வெட்டுவதற்காக ரூபா 4 லட்சம் செலவிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது நகைப்புக்குரிய ஒரு விடயமாக 'யுனிசெவ்' அமைப் புக்குள் பேசப்பட்டது. என்றாலும் 'யுனிசெவ்' அதிகாரிகள் என்ன செய்தனர்? ரி.ஆர்.ஓ.வின் ஊடாக புலிப்பயங்கரவாதிகளுக் குத் தாம் பெற்றுக் கொடுத்த நிதி தொடர்பாக செயல்படுவதற்கு கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்ட ஒருவரையே - அதாவ்து புலி உறுப்பினர் ஒருவரையே கொழும்பு அலுவலகத்துக்கு அழைத்து வந்தனர்.

அது தொடக்கம் ரி.ஆர்.ஓ. பெற்றுக் கொண்ட பணம், செலவு செய்யப்பட்ட விதத்தை தெரிவிக்கும் அறிக்கைகளில் உள்ள நகைப்புக்கிடமான விடயங்கள் 'யுனிசெவ்' நிறுவனத்துக்குள் கதைக்கப்படுவது தவிர்க்கப்பட்டது.

***உளவுபார்க்கும் நிறுவனமாக***

அது மாத்திரமல்ல. தமக்குச் சொந்தமான WPG/1074 இலக்கத்தைக் கொண்ட 'லாண்ட் குரூசர்' வாகனத்தை ரி.ஆர்.ஓ. ஊடக புலிகள் அமைப்பின் பயனீட்டுக்காக 'யுனிசெவ்' பெற்றுக் கொடுத்துள்ளது. தற்போது கூட அந்த வாகனம் 'யுனிசெவ்' விடம் இல்லை. அறிந்து கொள்ளப்பட்ட புலி உறுப்பினர்களுக்கு தொழில் வழங்கும்-உளவு பார்ப்பதற்காக அவர்களுக்கு சந்தர்ப்பத்தைப் பெற்றுக் கொடுக்கும் - நிறுவனமாக 'யுனிசெவ்' மாறி யுள்ளது. விடயங்களை நன்றாக ஆராய்ந்து பார்த்த பின்னரே நாம் இதனைத் தெரி விக்கின்றோம்.

ஐ.நா. சபைக்கு உரித்தான நிர்வாகச் செயல்பாடுகளையும் மீறி, ஓய்வு பெறும் வயதையும் கடந்த பெனி புறூன் என்ற பெண்மணி, கிளிநொச்சியிலுள்ள ஐ.நா. சபைக்குச் சொந்தமான இணை அலுவல கத்தில் கடமையாற்றுகிறார் என இதற்கு முன்னரும் நான் இந்தச் சபையில் கூறியுள் ளேன். அவர் புலிகள் இயக்கத்துக்காக பகிரங்கமாகவே செயல்படுவதையும் நான் குறிப்பிட்டுள்ளேன். இந்த விடயத்தை நாம் அம்பலப்படுத்தியதன் பின்னர், இந்த பெனி புறூன் என்ற புலிகள் சார்பு சர்வதேச 'ஏஜெண்ட்' ஐ.நா.சபை மூலம் இரகசியமாக சூடானுக்கு மாற்றம் செய்யப்பட்டார். தற்போது 'யுனிசெவ்' நிறுவனத்தில் இருக்கும் ஜெனிபர் டேலர் என்ற பெண்மணியும் கூட பெனிபுறூனின் பாத்திரத்தையே நடித்துக் கொண்டிருக்கிறார். ஏற்கனவே பெற்றுக் கொடுத்த பணம் செலவழிக்கப்பட்டதற்கான முறையான பற்றுச் சீட்டுக்கள், வங்கி அறிக்கைகள், கோவைகள் ஆகியவற்றைச் சமர்ப்பித்து நிரூபிக்கும் ஒழுங்கு முறையைக் கூட கவனிக்காது, ரி.ஆர்.ஓ. ஊடாக புலிப்பயங் கரவாதத்துக்கு பணத்தை வாரி வழங்கு பவர் தற்போதைய பெனி புறூன் அவர்தான்.

***புலி உறுப்பினர்களால் நிறைந்துள்ளது யுனிசெவ்***

'யுனிசெவ்' அலுவலகத்தை புலி உறுப்பினர்களால் ஏற்கனவே நிறைத்து விட்டார் ஜெனிபர் டேலர்.

அருள்ராஜ் ஸ்கந்தராஜா. தர்ஷனி, கிருபாகரன், தயாளதேவி துவாரகா, அபராஜித என்.தியாகராஜா, ரவிந்திரகுமார் குஞ்சிதபாதம், வினோராஜ் ரட்ணராஜ் ஆகியோர் அவர்களில் சிலராவர். நாம் அவர்களைப் புலி உறுப்பினர்கள் என அழைப்பது அவர்கள் இலங்கைத் தமிழர்கள் என்ற காரணத்தினாலல்ல. அவ்வாறு அழைப்பதாயிருந்தால் 'யுனிசெவ்' நிறு வனத்தில் கடமையாற்றும் எழுபது வீதமானோரை புலி உறுப்பினர்கள் என்றே நாம் அழைக்க நேரிடும். அவ்வாறானதொரு அபாண்டத்தைச் சுமத்த நாம் தயா ராயில்லை. எனினும்,மேலே பெயர் குறிப் பிட்ட நபர்கள் தொடர்பான விடயங்களை ஆதாரங்களுடனேயே நாம் வெளிப்படுத் தினோம்.

நாம் மேலே பெயர் குறிப்பிட்ட நபர்களில் ரவீந்திரகுமார் குஞ்சிதபாதம், ரி.ஆர்.ஓ மூலம் சமர்ப்பிக்கப்படும் பற்றுச் சீட்டுக்களை பரிசீலனை செய்வதற்காகவே நியமிக்கப்பட்டார். கிளிநொச்சியை வதி விடமாகக் கொண்ட அவருக்கு அவ்வாறானதொரு பொறுப்பு வழங்கப்பட்டதற்கான காரணம், ரி.ஆர்.ஓ அனுப்பும் அறிக்கையில் இருக்கும் "பொய்கள்" நிறுவனத் தில் கதைக் கப்படுவதைத் தடுப்ப தற்காகவேயாகும்.

***சிங்களம் தெரியாதவர் தென்பகுதிக்கு***

தயாளதேவி துவாரகா என்பவரும் கிளிநொச்சியை வதிவிடமாகக் கொண்டவராவார். சிங்களம் கதைக்கத் தெரியாத அவர் தென்பகுதிக்கான 'யுனிசெவ்' நடவடிக்கைகளுக்காகவே நியமிக்கப்பட்டுள்ளார். சிங்கள தெரியாத இந்தப் பெண்மணி தெற்கின் நடவடிக்கைகளுக் காக நியமிக்கப்பட்டமை ஏன்? 'யுனிசெவ்வின்' அறிமுக அட்டையை வைத் திருக்கும் அவரால் எந்த இடத்துக்கும் சுதந்திரமாகப் போய்வர முடியும். இன் னொருவரான அருள்ராஜ் ஸ்கந்தராஜா என்பவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தில் பயிலும் போதே புலிகள் இயக்கத் தின் மாணவர் செயல் வீரராக இருந்தவரா வார். தர்ஷினி கிருபாகரன் என்பவர் கூட கிளிநொச்சியின் நடவடிக்கைகளுக்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள புலிகள் இயக்க உறுப்பினராவார். இப்படியானவர்கள்தான் "யுனிசெவ்" நிறுவனத்தின் ஜெனிபர்களால் நியமித்துக் கொள்ளப் பட்டுள்ளனர்.

பொதுவாகப் பார்க்கப்போனால், ஐ.நா. சபையில் சேவையாற்றுபவர்கள் எவருக்கும் சார்பாகவோ,எதிராகவோ செயல்படக் கூடாது என்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதனை ஐ.நா. சபையின் செயலாளரும் உறுதிபடக் கூறியிருந்தார். அந்தக் கொள்கையை அப்பட்டமாக மீறும் விதத்திலேயே ஜெனிபர் டேலர் உள்ளிட்ட குழுவினர் செயல்படுகின்றனர். செஞ்சிலுவை சங்கத்தின உறுப்பினர்களில் சிலர் கொல் லப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்கு எதிர்ப் புத் தெரிவித்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங் களில் 'யுனிசெவ்' அடையாள அட்டை சகிதம் ஜெனிபர் டேலர் கலந்துக் கொண்டுள்ளார். அவர்களுக்கிடையில் பெட்ரீஸியா பர்வேஸ், லாராஸ்கோட ரேவல், மெகினி, தர்ஷனீ கிருபாகரன் ஆகியோரும் இருந் தனர்.

***கிளிநொச்சி செல்லும்போதும் வரும்போதும் வாகனங்கள் சோதிக்கப்படுவதில்லை***

பொதுவாக 'யுனிசெவ்' போன்ற நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகனங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுவதில்லை. கிளிநொச் சியை நோக்கிச் செல்லும் 'யுனிசெவ்' வாகனங்களில் பெரிய பார்சல்களும் அநேகமாக அனுப்பப் படுகின்றன. கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு வரும் அவ்வாறான பார்சல்களும் இருக்கின்றன. இவற்றால் என்னென்ன பரிமாறப்படுகின்றன என்பது யாருக்கும் தெரியாது. ரி.ஆர்.ஓ ஊடாகலட்சக்கணக்கான பணத் தைப் புலிப் பயங்கரவாதிகளுக்கு வழங் கிய அமைப்பொன்று அதைவிட அதிகமான உதவிகளை வழங்காது என்று கூற முடியுமா?

இவை வெளிவந்திருக்கும் சிறு தகவல்கள் மாத்திரமே. உண்மையான நிலைமை இதனை விட மோசமானதாகும். எனவே இது தொடர்பாக அரசு கடுமையாகக் கவனம் செலுத்த வேண்டும். பயங்கரவாதத்துக்கு பணம் வழங்கல். இலங்கையில் கடுமை யான தண்டனைக்குரிய குற்றமாகும். ஐ.நா. சபையின் இணக்கத்தோடு அது தொடர்பான சட்ட மூலமொன்று எல்லோரது ஏகோபித்த ஆதரவோடு இந்த அதியுயர் சபையில் நிறைவேற்றப் பட்டுள்ளது.

ஆனால், ரி.ஆர்.ஓ. மூலம் புலிப் பயங் கரவாதிகளுக்கு பணம், வாகனம் மற்றும் வேறு அநேகமானவற்றை ஐ.நா. சபையே வழங்கும்போது - எங்களால் நிறைவேற்றப்பட்ட சட்டமூலம் வலுவற்றதாகும் போது - அதன் பயன் என்ன? பிரிவினைவாதப் பயங்கரவாதத்தின் கடுமையான அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் நாட்டில், ஐ.நா. சபைக்குச் சொந்தமான சிறப்புரிமைகள் இவ்வாறு பயங்கரவாதத் துக்குச் சார்பாகப் பயன்படுத்த இடமளிக்க முடியுமா? அவர்கள் இடமளித்து விட்டு வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க முடியுமா? இந்தப் பிரச்சினைகளுக்கு நாமே பதிலைத் தேடிக்கொள்ள வேண்டும். இலங்கையின் தற்போதைய நிலை தொடர்பாக இம்மாதம் 13 ஆம் திகதி (இன்று) பிரித்தானிய நாடாளுமன்றத்தில் மீண்டும் கலந்துரையாடுவதற்குத் தயாராவதாகக் கூறப்படும் இச் சந்தர்ப்பத்தில், மேற்கத்திய ஏகாதிபத்தியத்தின் கைக் கூலியாக மாறியிருக்கும் ஐ.நா. சபையின் இந்தநடவடிக்கை தொடர்பாக இதனையும் விட அவதானிப்போடு கலந்துரையாடி தீர்மானங்களுக்கு வரவேண்டுமல்லவா? இது தொடர்பான வெளிநாட்டமைச் சரின் நிலைப்பாடு என்ன? இந்த நாட்டை நேசிக்கும் மக்களுக்கு இது தொடர்பான பதில் கட்டாயமாகத் தேவை - என்றார் அவர்.

## நாளை

| | |
|---|---|
| ஐப்பசி - 28 | புதன்கிழமை 14.11.2007 |
| திதி : சதுர்த்தி மு.ப 11.20 | |
| நட்சத்திரம் : | மூலம் காலை : 07.38 |
| சுபநேரம் | : 04.37 - 06.07 |
| ராகுகாலம் | : 12.07 - 01.37 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழநெடுமாறனும் வைகோவும் கைது செய்யப்பட்டு பொலீஸ் வாகனத்தில் ஏற்றிச்செல்லப்படுகின்றனர்.


சுடர் ஒளி

(நவ. 04-10,2007)



* தமிழ்ச்செல்வனின் மரணமும் அரசின் போர்க் கோலமும்
* குடாநாட்டில் ஊட்டுறவு அதிகாரிகள் ஒட்டுறவு
* சமஷ்டி: பாலாவின் அத்திட்டத்தை சந்திரிகாவும் எதிர்த்தார் - ஒரு பத்திரிகையாளனின் பட்டறிவுத் தொடர்-iv
* எல்லாளன் நடவடிக்கையும் புலம்பெயர் தமிழர்களும்
* நேபாளத்தில்- மலர்ந்துள்ள சமாதானமும் கேள்விக்குறியாகும் எதிர்காலமும்
* மனிதனின் உயரத்தை மாற்ற முடியுமா?
* மியாமி கரைதனில் சிதறிய சடலங்கள் (தொடர்கதை)
* தரம் 4 மாணவருக்கான கல்விச்சுடர்

மற்றும் சுவையான - வழமையான அம்சங்களுடன் வெளிவருகிறது

உங்கள் உதயன் முகவரிடம் இன்றே கேட்டு வாங்குங்கள்

இன்று விற்பனையில்


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
புஸ்பராணி இராஜரட்ணம்


மண்ணுலகில்
13.02.1927

விண்ணுலகில்
13.11.2005

'உயிர்தெழுதலும் ஜீவனும் நானே என்னில் விசுவாசம் வைக்கிறவர்கள் மரித்தாலும் பிழைப்பார்கள்.' (இயேசு)

தேவாலய வீதி, சங்கானை (67901) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர் சிவகுரு உமாகாந்தன்

[விரிவுரையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம்]

இறுதிவரை எம்மோடு இணைந்திருந்து கரைசேர்ப்பீர்
என்றிருந்தோம். இடை நடுவே தவிக்கவிட்டு
ஏன் ஐயா மறைந்தீர்கள். மறுபிறப்பு என்பது மானிட
உண்மையென்றால் மறுபடியும்
பிறந்திடுங்கள் எங்கள் ஆசானாய்.

உயர் தொழில்நுட்ப நிறுவனம்,
HNDA(Day) 2ஆம் வருட மாணவர்கள்.

(சி/54344)

## கண்ணீர் அஞ்சலி



தொழில்நுட்பக்கல்லூரி முன்னாள் விரிவுரையாளரும் தற்போதைய உயர் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளருமான

சிவகுரு உமாகாந்தன்

அவர்கள் 11.11.2007 அன்று
சிவபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த
துயரடைவதுடன், அன்னாரின் பிரிவால் துயருரும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து
அமரரின் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

கே.கணேசமூர்த்தி அதிபர்,
தொழில்நுட்பக் கல்லூரி, வவுனியா.

(சி/54344)

## திருநெல்வேலிச்சந்தைக்கு பொருள்கள் வாங்கச் சென்ற வர்த்தகர் சுட்டுக்கொலை

குருநகர், நவ. 13

யாழ். நகரில் இராசாவின் தோட்ட வீதியில்-ரயில்வே தண்டவாளத்துக்கு சமீமாக உள்ள ஒழுங்கையில் வைத்து வர்த்தகர் ஒருவர் நேற்றுக் காலை 6.30 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

குருநகர் தொடர்மாடியைச்சேர்ந்த சூரி என அழைக்கப்படும் பிரான்சிஸ் பிலிப் (வயது-40) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார். 5 பிள்ளைகளின் தந்தையான இவர் குருநகர் பகுதியில் தேநீர்க் கடை நடத்திவந்தார்.

வழமைபோல தமது கடைக்கு தேவையான பொருள்களை திருநெல்வேலி சந்தையில் கொள்வனவு செய்ய சென்ற வேளையில் இராசாவின்தோட்ட வீதியில் வழிமறித்த ஆயுததாரிகள் அவரை சுட்டு விட்டு தப்பிவிட்டனர் என்று விசாரணை யின்போது தெரிவிக்கப்பட்டது.

யாழ். பதில் நீதிவான் க.கேசவன் விசாரணை நடத்தினார். பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (அ-1-51)

## பாதுகாப்பு உயர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாறு படையினருக்கு நீதிமன்றம் உத்தர விடவேண்டும் - என்று கோரினார்.

இதேபோன்று சுமார் பத்தாயிரம் பேரை அங்கு மீளக் குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சு மேற்கொண்டுள்ளது. இதற்கான நேர்முகக் கலந்துரையாடல்கள் குடி மக்களோடு மேற்கொள்ளப்பட்டுள்ளன'' - என்று அரசுத் தரப்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

யாழ். அரச அதிபரினால் அடையாளம் காணப்பட்டோரை மீளக் குடியமர அனுமதிப்பது தொடர்பாக நீதிமன்றுக்கு அறிவிக் குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்த உயர் நீதிமன்றம், மனுக்களை மார்ச் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

## வைகோ,....

(முதலாம் பக்க தொடர்ச்சி)

''ஆதரிப்போம்! ஆதரிப்போம்! தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரிப்போம்!'' என்றும் -

''வீரவணக்கம்! வீரவணக்கம்! தமிழ்ச் செல்வனுக்கு வீரவணக்கம்!'' என்றும் -

வைகோ முழக்கம் எழுப்ப தொண்டர்களும் பெரும் எண்ணிக்கையில் திரண்ட ஆயிரக்கணக்கான தமிழ் உணர்வாளர்களும் முழக்கமிட்டு ஊர்வல மாக நகர முயற்சித்தனர்.

அப்போது ம.தி.மு.க. நிர்வாகி வேளச்சேரி மணிமாறனை காவல்துறை தாக்கியதாக வைகோ குற்றம்சாட்டி முழக்கமிட்டார்.

### ஆவேசமடைந்தார் வைகோ

இதனைத் தொடர்ந்து வைகோவிடமிருந்த ஒலிபெருக்கியை காவல்துறையினர் பறித்தனர். அதனால் ஆவேசமடைந்த வைகோ, ''ஒலிபெருக்கியை பிடுங்கிய உங்களால் என் தொண்டையைப் பிடுங்க முடியுமா?'' என்று காவல்துறையினரிடம் கூறி ஒலிபெருக்கி இல்லாமல் முழக்க மிட்டார்.

அதன்பின்னர் வைகோ, பழ. நெடுமாறன், மார்க்சிய பெரியார் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளர் வே. ஆனைமுத்து, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் செயலாளர் மணியரசன், ஓவியர் வீரசந்தானம், எழுத்தாளர் பா. செயப் பிரகாசம் மற்றும் அங்குதிரண்டிருந்த ம.தி.மு.க நிர்வாகிகள் உள்ளிட்டவர்களை காவல்துறையினர் மாலை 5.20 மணியளவில் கைது செய்தனர்.

### புலிகளுக்கு ஆதரவான கட்சிகளை தடைசெய்ய தமிழக காங்கிரஸ் தீர்மானம்

சென்னையில் நேற்று நடந்த காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் கள் கூட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவுவழங்கும் கட்சிகள் தடைசெய்யப்பட வேண்டும். அத்தகைய கட்சிகள் மீது தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது.


ஐடியல் அக்கடமி
நீராவியடி, யாழ்ப்பாணம்.

CHEMISTRY
A/L 2009

ஆரம்பம்: 14.11.2007
புதன் 4.00 மணி
ஆசிரியர்: A.தபேசன் (B.Sc.)


## கச்சேரி-நல்லூர் வீதியில் இளைஞன் சுட்டுக்கொலை

யாழ். கச்சேரி-நல்லூர் வீதியில் ஆசீர்வாதப்பர் வீதிக்கு சமீபமாக இளைஞன் ஒருவன் நேற்றுக் காலை 7 மணியளவில் இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்று மாலைவரை சடலம் அடயாளம் காணப்படாத நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது.

சடலத்தை அடயாளம்கண்ட பின்னர் மரண விசாரணை நடத்துமாறு பதில்நீதிவான் க.கேசவன் உத்தரவிட்டார்.(அ-1)

## யாழ். இளைஞன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டார்கள் என்றும் முதற்கட்ட விசாரணையில்பொலிஸாரிடம் கூறியுள்ளார் நிசாந்த். மேலதிக விசாரணைக்களுக்காக புலனாய்வுப் பொலிஸாரிடம் இவர் ஒப்படைக்கப்பட்டுள்ளார் எனப் பிந்திக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன. (சி)

## வவுனியா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்பட்டது.

மன்னார் - அடம்பன் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற பிறிதொரு மோதல் ஒன்றிலும் 3 விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்த மோதல்கள் தொடர்பாக விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தகவல்கள் எதனையும் வெளியிடவில்லை. (சி)

## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்த ஜனாதிபதி, கவிதைப் போட்டிக்குக் கவிதை வாசிக்கின்றமை போலவும் கந்தபுராணம் படிப்பது போலவும் அதை வாசித்தார்.

மறுநாள் அவரது தம்பி பஸில் ராஜபக்ஷ அந்தவரவு-செலவுத்திட்டத்திற்கு - கந்தபுராணத்திற்கு - மேலதிக விளக்கங்களைக் கொடுத்தார்.

முழுக்க முழுக்க தமிழர்களைக் கொன்று குவிப்பதற்காக அதிக முக்கியத்துவம் கொடுக்கும் - அதிக நிதியை ஒதுக்கியிருக்கும் - இந்த வரவு - செலவுத் திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஆதரிக்காது-என்றார். (சி)

## மரண அறிவித்தல்கள்



### பரமநாதன் ஜெயக்குமார்

தாவளை, இயற்றாளை, கொடிகாமத்தைச் சேர்ந்த பரமநாதன் ஜெயக்குமார் (ஜெயா) (11.11.2007) ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதன்- இராஜேஸ்வரி தம்பதியரின் மகனும், சண்முகராசா, சத்தியானந்தன் (பிரான்ஸ்), சண்முகவடிவேல் (டோகா), சற்குணராசா (டோகா), சாந்தமலர் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மந்துவில் ஞானியாகாடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவளை, இயற்றாளை,
கொடிகாமம். (67903)

தகவல்:
குடும்பத்தினர்.



### நடராசா மயில்வாகனம்

யாழ்ப்பாணம், நல்லூரைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும்கொண்ட நடராசா மயில்வாகனம் நேற்று (12.11.2007) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா-நாகம்மா தம்தியரின் மக னும் காலஞ்சென்ற செல்லப்பா-இரத்தினசினோன்மணி (குங்குமம்) தம்பதியரின் அன்புமருமகனும், தவமணி தேவியின் கணவரும், அன்பரசி (ஜேர்மனி), இரவீந்திரன் (ஜேர்மனி), சுபாசினி (சுவிஸ்), சத்தியானந்தன் (ஜேர்மனி), சிவானந்தன் (ஜேர்மனி), கணேசானந்தன், ரேவதி, சுந்தரவதனி (சுதா) ஆகியோரின் தகப்பனும், பாஸ்கரன் (ஜேர்மனி), தேனுகா (ஜேர் மனி), சிற்சபேசன் (சுவிஸ்), நவலோயினி (ஜேர்மனி), அனுசியா (ஜேர்மனி), சதுஸ்ரதி, சிவனேசன், மகேந்திரன் ஆகியோ ரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 40/8, நாயன்மார் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.



### திருமதி கந்தையா கனகம்மா

நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வேலன்பராய், தச்சன்தோப்பை வசிப்பிடமாகவும், இல.15/10 முதலாம் ஒழுங்கை, இராம நாதன் வீதி, நாச்சிமார் கோயிலடி, வண்ணார் பண்ணையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா-கனகம்மா நேற்று (12.11.2007) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு கந்தையாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் சிரேஸ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களானகதிர்காமு- மாணிக்கம் தம்பதியரின் மருமகளும், பொன்னம்மா, மயில்வாக னம், அருளானந்தன் (சுவிஸ்), தங்கராசா (கனடா), வன்னியசிங்கம், மங்கையர்க்கரசி, நாகநாதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சோமசுந்தரம், சாந்தகுமாரி, தவமணி, இராசமலர், மனோரஞ்சிதம், சரோஜதேவி, துரைராசா, சுசீலாதேவி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னத்துரை, துரைராசா மற்றும் மகேஸ்வரி (கண்மணி)யின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.11.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலைஅனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்:- பொன்னம்மா (செல்லம் -வேலன்பராய்),
மயில்வாகனம் (பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம்),
வன்னியசிங்கம் (செல்வம்-நீர்வேலி குறுக்கு றோட்),
மங்கையர்க்கரசி (வண்ணார்பண்ணை).

வண்ணார்பண்ணை.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.11.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org